# ஸ்ரீமா வெளிநாடு செல்லும்போது மைத்திரி அரசாங்க தலைவர்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 196
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆவணி 10 ஜமா. ஆகிர் 23 புதன்கிழமை [26-8-70]

**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும்.
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

கொழும்பு, செவ். பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா வெளிநாடு செல்லும் பொழுது அரசாங்கத் தலைவராக திரு. மைத்திரிபாலசேனநாயகா கடமைபுரிவார் செப்டம்பர் 4-ந் திகதி லுசாக்சாவில் நடைபெறும் மகாநாட்டில் கலந்துகொள்ளச் செல்கிறார்' அவர் அங்கிருந்து இலங்கைக்கு திரும்பும் வழியில் பிரான்ஸ், மேற்குஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு செப்டம்பர் 19ந் திகதி விஜயம் செய்வார்,

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா வெளிநாடுகளுக்குச் செல்லும்போது முதலாம் வகுப்பில்செல்லமாட்டார்

செலவுத் தொகையைக் குறைக்க வேண்டுமென்ற நோக்குடன் அவர் 2-ம் வகுப்பிலேயே செல்வார். ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முதலாம் வகுப்பு ரத்துச்செய்யப்பட்டு 2ம் வகுப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயகா அரசாங்கத்தில் பிரதமர் இல்லாத சமயத்தில் திரு.சி.பி டி. சில்வாவே அரசாங்கத் தலைவராகக் கடமையாற்றினர். (சி பி ஏ)

## 55 வயது ஓய்வு பெறும் திட்டம்:

# கூட்டுஸ்தாபன ஊழியருக்கு அமுல் நடத்துவதில் சிரமம்

## அட்டோர்னிஜெனரலுடன் அமைச்சு ஆலோசனை

கொழும்பு, செவ்வாய்

**அரசாங்க ஊழியர்கள் 55 வயதுடன் ஓய்வுபெறவேண்டுமென்ற புதிய திட்டத்தை கூட்டுத்தாபனங்களில் அமுல் நடத்த முடியாமல் இருப்பதாகத் தெரியவருகிறது. இதுசம்பந்தமாக கைத்தொழில் விஞ்ஞான விவகார அமைச்சர் அட்டோர்ணி ஜெனரலுடன் பேச்சுவார்த்தை நடாத்துகிறர்.**

கூட்டுஸ்தாபனங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஊழியர்களை நியமனம் செய்யும்போது 60 வயதுவரை சேவையாற்ற அனுமதிக்கப்படுவார்களென்று சுற்றுநிருபம் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்ததே. இதனால் ஊழியர்களைப் பொறுத்தமட்டில் அமுல் நடத்துவதில் சிரமம் இல்லையென்றும் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா தெரிவித்துள்ளார்.

கூட்டுத்தாபனங்களைச்...

### பெல்ஜியத் தூதரை கடத்த முயற்சி

மெக்சிக்கோ: ஆகஸ்ட் 25
மெக்சிக்கோவில் உள்ள பெல்ஜியத் தூதுவரைக்...

சேகுவேரா இயக்கம்:

## வெளிநாட்டு ஆதரவு இல்லையாம்

கோட்டை, செவ்வாய்
'சேகுவேரா இயக்கத்துக்கு வெளிநாட்டார் ஆதரவளிக்கவில்லை. வெளிநாட்டு பண உதவியோடு அதுவளரவுமில்லை, இந்நாட்டிலுள்ள இளைஞர்கள் சிலரால்லேயே இவ்வியக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.'

மாத்தறையில் நடைபெற்ற பரிசளிப்புவிழாவொன்றில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்ட கலாச்சார அமைச்சின் உதவி அமைச்சர் திரு.சோமவீரசந்திரசிறி உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்விழாவில் கலந்து கொண்ட முன்னைநாள் [illegible] திரு. ஹேமாபசநாயக்கா பேசுகையில் சேகுவேரா இயக்கம் முதலாளிவர்க்கத்தினரா[illegible]

இந்தியா

### திரும்பும் விவசாயிக்கு ரூபா 4350

சென்னை ஆகஸ்ட் 25
இலங்கையிலிருந்து பர்மாவிலிருந்தும் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்படுபவர்கள் விவசாயம் செய்ய விரும்பினால் அவர்களுக்கு குடும்பம் ஒன்றுக்கு ரூபா 4350. தமிழ் நாடு அரசாங்கம் கொடுக்கும் இவர்களுக்காக நெல்லை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் பதினைன்காயிரம் ஏக்கர் விவசாயநிலம் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி செய்யவிரும்பியவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டால் அவர்களுக்கு அரசாங்கம் உதவிசெய்யும்திருச்செந்தூர்நீலிபுத்தூர் ஆகியஇடங்களிலுள்ள நூற்சாலைகளிலும்இடமளிக்கபடும்எனவிம் தெரியவருகிறது.

### பண்டிதமணி முதல்—

தென்னிந்தியாவில் இருந்துவரும் இலக்கியக்குப்பைகளை தடைசெய்ய வேண்டுமென்று பலரும் வற்புறுத்துகிறார்கள். அரசாங்கமும் இதுபற்றி ஆலோசனை செய்து வருகிறது.

எழுத்தாளர்கள் வாசகர்கள் கருத்து என்ன? இதுபற்றிநமது நிருபர் பல துறைகளையும்சேர்ந்தவர்களைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களை தொகுத்துத் தருகிறர்.

'ஈழநாடு' வாரமலர் 31-8-70 இதழில் படிக்கத் தவருதீர்கள்.

### சிங்கப்பூர் பிரதமர் இன்று இலங்கை வருகிறர்

கோட்டை, புதன்
சிங்கப்பூர் பிரதமர் திரு. லீ குவான் யு தனது ஐந்து நாள் இராஜாங்க விஜயத்தை ஒட்டி இன்று மாலை 6 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்து சேர்வார், இவரை விமான நிலையத்தில் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் உயர்தர அதிகாரிகளும், வெளிநாட்டு ஸ்தானிகர்களும் வரவேற்பார்கள்.

## இன அடிப்படையில் பல்கலைக்கழகபிரவேசம்

### அரசாங்கத்தை கோருவர்

கொழும்பு,செவ்.
கண்டியிலுள்ள மக்கள் சக்தியுடைய கண்டியத் தலைவர்கள்இன அடிப்படையில் (விகிதாசாரப்படி) பல்கலைக்கழக பிரவேசம் அனுமதிக்கப்பட வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்பதற்கு முடிவுசெய்துள்ளனர்.

வண ஹலியெல சுமணதிசநாயக்கதேரோ தலைமையில் தூதுக்குழுவொன்று இப்பிரேரணையை ஏற்கச்செய்வதற்காக இம்மாதம் 29-ந் திகதி பிரதமமந்திரியையும் கல்வி அமைச்சரையும் சந்திக்கவிருக்கிறது.

கண்டியிலுள்ள ஹெராம்பேயில் இராஜபவரண ஆலயத்தில் நடந்த கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. (சி பி ஏ)

வடபகுதி அசைஸ் விசாரணை

## மானிப்பாய் கொலை முயற்சி

### வழக்கில் எதிரிக்கு 3 வருட சிறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுஸ்தாபனங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஊழியர்களை நியமனம் செய்யும்போது 60 வயது வரை சேவையாற்ற அனுமதிக்கப்படுவார்களென்று சுற்றுநிருபம் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்ததே இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

அரசாங்க ஊழியர்கள் நியமனம் செய்யப்பட்டபோது சேவைக்காலவெல்லை பற்றிக் குறிப்பிடப்படவில்லை என்றும், அரசாங்கத்தின் இப்புதிய திட்டத்தை, அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தமட்டில் அமுல் நடத்துவதில் சிரமம் இல்லையென்றும் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா தெரிவித்துள்ளார்.

கூட்டுத்தாபனங்களைச் சேர்ந்த ஊழியர்களைப் பொறுத்தமட்டில் 55 வயது திட்டத்தை அமுல்நடத்துவதானல் முன்பு விடுக்கப்பட்ட சுற்றுநிருபத்தில் சில மாற்றங்களைக் கொண்டுவர வேண்டுமென்று அரசாங்க வட்டாரம் கருதுகிறது.

(சிபிஏ)

## பெல்ஜியத் தூதரை கடத்த முயற்சி

மெக்சிக்கோ: ஆகஸ்ட் 25

மெக்சிக்கோவில் உள்ள பெல்ஜியத்தூதுவரைக் கடத்திச் செல்ல முயற்சித்துத் தோல்விகண்டவர் மெக்சிக்கோவிலுள்ள கைதிகள் தங்கள் விடுதலை கோரியே இக்கடத்தல் முயற்சியை மேற்கொண்டனராம். இக்கைதிகள் ஆறுமாதமாக சமஸ்டிச்சிறைச் சாலையில் இருப்பதாக தெரிகிறது. இவர்களுடைய இக்கடத்தல் முயற்சியை சமஸ்டிப்பொலிசார் முறியடித்தனர்.

... ...

## அனலைதீவுமக்கள் ஆட்சேபம்

அனலைதீவு, செவ்.

அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தில் இந்த ஆண்டு ஜீ ஸி. ஈ. விஞ்ஞான மாணவர்களுக்குக் கணிதத்திற்குப்பதிலாக எண்கணிதம் படிப்பிக்க இவ்வித்தியாலய அதிபர் ஒழுங்கு செய்துள்ளமையை ஆட்சேபித்து அனலைதீவுப் பொதுமக்கள் கல்வி அமைச்சருக்கும் கல்வி அதிபதிக்கும் தீவுப்பகுதி எம். பி க்கும் மகஜர் அனுப்பியுள்ளனர்.

இ... நர்கள் சிலராலேயே இவ்வியக்கம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.'

மாத்துறையில் நடைபெற்ற பரிசளிப்புவிழாவொன்றில் பிரதம விருந்தி...ராகக்கலந்து கொண்ட

இவ்விழாவில் கலந்து கொண்ட முன்னைநாள் நீதியரசர் திரு. ஹேமாபசநாயக்கா பேசுகையில் சேகுவேரா இயக்கம் முதலாளிவர்க்கத்தினரால் ஆதரிக்கப்படவில்லை. முன்னேற்றத்தை விரும்பும் இளைஞர்களின் உணர்ச்சிகளையே இந்த இயக்கம் பிரதிபலிக்கிறது எனக்குறிப்பிட்டார்

கல்வியமைச்சின் உதவியமைச்சர் திரு. பி. வை. துடாவையும் இவ்வைபவத்தில் சொற்பொழிவாற்றினர்.

தவர்களைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களை தொகுத்துத் தருகிருர்.

'ஈழநாடு' வாரமலர் 31-8-70 இதழில் படிக்கத் தவருதீர்கள்.

## பாடசாலை மாணவன்வரை!

வடபகுதி அசைஸ் விசாரணை

## மானிப்பாய் கொலை முயற்சி வழக்கில் எதிரிக்கு 3 வருட சிறை

யாழ்ப்பாணம், புதன்

மானிப்பாய் கொலை முயற்சி வழக்கில் எதிரிக்கு 3 வருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இவ்வழக்கு நேற்று வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் திரு. ஏ. எல். எஸ். சிறிமானே முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. இவ்வழக்கில் 1968-ம் ஆண்டு ஏட்ரல் 17-ம் திகதி மானிப்பாயில் சண்டியன் இளையதம்பி என்பவரை கொலைசெய்ய முயற்சித்ததாக சின்னப்பொடி வேலுப்பிள்ளை என்பவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் அட்வக்கேட் எஸ், நாகராஜா அட்வக்கேட் ரி ஜெயசோதியின் உதவியுடனும், புறக்டர் ரி. யோகநாதன் அனுசரணையுடனும் ஆஜராஞர்.

எதிரி கைமோசக்கொலை முயற்சிக் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

## நடமாடும் காய்கறி நிலையம் இன்றுகொழும்பில் ஆரம்பம்

கோட்டை, புதன்

சந்தைப்படுத்தும் திணைக்களத்தின் நடமாடும் காய்கறி விற்பனவு சேவை இன்று முதல் கொழும்பு நகரத்தில் ஆரம்பித்து வைக்கப்படவிருக்கிறது

மொத்திகளில் அடைக்கப்பட்ட காய்கறிகளை வீதி வழியே சென்று விற்பனவுசெய்ய வேண்டுமென்று அரசாங்கத் புதின் திட்டம் கொழும் நகரில்முதலில் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

வாழ்க்கைச்செலவை இத்திட்டத்தின் மூலம் குறைக்கலாம் என உள்நாட்டு, வெளிநாட்டு அமைச்சர் கருதுகிருர். இத் திட்டம் முதலில் கொழும்பு மாநகரத்தில் பரீட்சித்துப் பார்க்கப்படும் என்றும், பின்னர் நாடுபூராவும் விஸ்தரிக்கப்படும் என்றும், அவர்தரிவித்துள்ளார்.

ஒக்டோபரில்

## 15000 பேருக்கு வேலை

அனுரதபுரம் செவ்!

'அரசாங்கம் இவ் வருடம் அக்டோபர் மாதத்தில் 15000 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கத் தீர்மானித்துள்ளது பொறுத்திருங்கள் மக்களுக்கு வேண்டியசகல நன்மைகளையும் அரசாங்கம் மிக விரைவில் செய்து கொடுக்கும்'

இவ்வாறு நீர்ப்பாசன மின்சார, நெடுஞ்சாலை அமைச்சர் திரு. மைத்திரிபால செனநாயக்கா அனுராதபுரம் புதிய நகர சனசமூக நிலையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது முன்னைய அரசாங்கம் மேற்கு ஜேர்மனியிடம் 75 லட்சம் ரூபா கடன் வாங்கியது அண்மையில் தான் தெரியவந்தது அதையும் 11 மாதங்களில் திருப்பிக் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. ஆனல் ஒரு வருடமாகியும் கொடுக்கப்படவில்லை.

திரு. ஐ. ஒ. விக்கிரமவணவிஜிததேரோஉட்படப் பலர் உரையாற்றினர்.

## பிரதமர் இன்று அடிக்கல் நாட்டுவார்

கோட்டை, புதன்

அஞ்சல் தொலைத் தொடர்புச் சேவையாளர் சங்கத்தின் உத்தேச பன்னிரண்டு மாடிக் கட்டிடத்திற்கான அடிக்கல்லை இன்று காலை பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நாட்டுகின்ருர், தபால் அமைச்சர் திரு. செ. குமாரசூரியர், உள்ளூராட்சி அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா ஆகியோர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

இக்கட்டிடத்திற்கான காணியை முந்திய அரசாங்கம் இச்சங்கத்தினருக்கு இலவசமாக வழங்கியது. இக்காணிகொழும்புக் கோட்டையில் உவ்ளபாசன்ஸ் வீதியில் அரசாங்க சேவை விளையாட்டுக்கழக மைதானத்திற்கு முன்பாக அமைந்துள்ளது.

இச்சங்கம் அதன் வெள்ளி விழாவை விமரிசையாகக் கொண்டாடுகிறது. வெள்ளி விழா வைபவத்திற்கு தபால் தந்தி அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

கூட்டுத்தாபன

## சம்பள திட்டத்தை பரிசீலனை செய்ய குழு

கோட்டை, செவ்,

கூட்டுத்தாபன ஊழியர்களின் சம்பளத் திட்டத்தைப் பரிசீலனை செய்து, புதிய சம்பளத் திட்டமொன்றைத் தயாரிக்க அரசாங்கம் மூன்று பேர் கொண்ட குழுவொன்றை நியமிக்கத் தீர்மானித்துள்ளது.

சகல கூட்டுத்தாபனங்களிலும் ஒரே மாதிரியான வேலை செய்பவர்களிடையே கூட சம்பள விகிதங்கள் மாறுபட்டுக் காணப்படுவதாகத் தொழிற்சங்க ஊழியர்கள் அரசாங்கத்துக்குப் புகார் தெரிவித்ததைத் தொடர்ந்தே அரசாங்கம் மேற்படி நடவடிக்கையை எடுக்கவிருக்கிறது.

## எதிர்க் கட்சியினர் வெளிநடப்பு

சென்னை, ஆக.25

தமிழ்நாடு சட்டசபையின் இன்றைய கூட்டத்தின் போது இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிஸ்ட்கட்சி, பிரஜா சோஷலிஸ்ட கட்சி ஆகியவைகளின் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செயதனர்.

நிலப்பறி இயக்கம் சம்பந்தமாக தமிழக அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றி விவாதிக்க வேண்டுமென எதிர்க்கட்சியினர் சிலர் கொண்டு வந்த ஒத்திவைப்புப் பிரேரணை மீது பேசிய முதலமைச்சர் கூறிய சில வார்த்தைகள் பற்றி ஆட்சேபித்தே இவர்கள்வெளிநடப்புச் செதனர்.

கொடிகாமம்

## 'ஐயா' கொலை வழக்கு செப். 9-ல் விசாரணை

யாழ்ப்பாணம், திங்.

முதலாவது எதிரியை இந்தக் கோர்ட்டுக்கு வந்த பின்புதான் தெரியும். கோர்ட்டுக்கு வருமுன் முதலாவது எதிரியைப் பார்க்கவில்லை. இதற்கு முன்னர் இரண்டாவது எதிரியைப் பார்க்கவில்லை'

கொடிகாமம் பஸ் சாரதி கொலைவழக்கில் சாட்சியமளித்த கார்ச் சொந்தக்காரரானபுன்னலைக்கட்டுவன் வடக்கைச்சேர்ந்த பெரியதம்பி துரைசிங்கம் சாட்சியமளிக்கும்போது மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு சாவகச்சேரி மஜிஸ்திரேட் திரு கே.விக்னராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 70-ம் ஆண்டு மார்ச்மாதம் 21-ம் திகதி கொடிகாமத்தில் கணேசமூர்த்தி ரி. நவரத்தினம் வி. ராமலிங்கம் ஆகியோர் பஸ் சாரதியாகிய சின்னப்பொடி வேலுவை கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. எதிரிகள் சார்பில் அட்வக்கேட் ஜே பி செரிபிம், அட்வக்கேம் ஏ ஜே தம்பிரத்தினம் ஆகியோர் புறக்டர் எஸ் அம்பலவாணர், புறக்டர் எஸ் வி மயில்வாணம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராகினர்கள்

துரைசிங்கம் தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது: 21ம் திகதி காலை 6-30 மணிக்கு ஒருவரும்வரவில்லை சார்ஜன்ட் தாமோதரம்பிள்ளைக்கு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் 1-4-70ல் வாக்குமூலம் அளிக்கவில்லை. எனது காரை எடுப்பதற்குப் பொலிஸ் நிலையத்திற்குப் போனேன். நான் பொலிஸில் வாக்குமூலம் கொடுக்கவில்லை.

மேல் விசாரணை அடுத்த மாதம் 9-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

---

சாவகச்சேரி கொலைமுயற்சி வழக்கு

## 'லொறி சுவரில் மோதியதும் அசோகபாலன்விழுந்துவிட்டார்'

யாழ்ப்பாணம், வியா,

"இவ்வருடம் தைப்பொங்கல் தினம் இரவு 7 மணிக்கு முருகன் ஸ்ரோர்சுக்கு முன்னல் நின்றேன். அசோகபாலனை தெரியும். லொறி ஒன்றை கண்டேன். அது எதிரியின் லொறி. அந்த லொறியில் தமிழரசுக் கொடி இருந்தது. பொங்கல் ஊர்வலத்தை பார்க்க நின்றேன். அங்கு நின்றவர்கள் 'குமாரசாமிக்கு ஜே' என்று கோஷமிட்டனர். லொறி 4 அடி பின் சென்று நான் நின்ற கூட்டத்தை நோக்கி வந்தது. அதனை எதிரி ஓட்டி வந்தார். லொறி சுவரில் மோதியது அசோகபாலன் கீழே விழுந்து விட்டார்."

சாவகச்சேரி கொலை முயற்சி வழக்கில் சாட்சியமளித்த பொ. சதானந்தனி மேற்கண்டவாறு கூறினர் இவ்வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் நேற்று விசாரணை செய்யப்பட்டது

இவ் வழக்கில் சாவகச்சேரியில் இவ்வருடம் ஜனவரி 14-ம் திகதி சுபந்து அசோகபாலன் என்ற வாலிபனை கொலை செய்ய முயற்சித்ததாக சிதம்பரநாதன் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் அட்வகேட் ஏ. அமிர்தலிங்கம்,புறக்டர் என். அருணசலத்தின் அனுசரணையுடன் ஆஜராஞர். வளக்காளி சார்பில் அட்வகேட் எம். எஸ். சுந்தரலிங்கம், புறக்டர் எஸ். பி. மயில்வாகனத்தின் அனுசரணையுடனும், சாவகச்சேரி பொலிஸாரின் உதவியுடனும் ஆஜராஞர்.

விசாரணையைப் பார்ப்பதற்கு கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானேர் திரண்டிருந்தனர்.

பொ. சதானந்தன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: எதிரி தமிழரசுக்கட்சி ஆதரவாளர். நான் தமிழ் காங்கிரஸ் ஆதரவாளன். எனக்குப் பக்கத்தில் நின்றவர்களும் தமிழ் காங்கிரஸ் ஆதரவாளர்கள். லொறி 40 மைல் வேகத்தில் வந்தது. லொறி வந்த வீச்சையும், சத்தத்தையும் பார்த்து வேகத்தை சொல்லுகிறேன். லொறி எங்களை நோக்கி வந்தபோது நான் பக்கத்தில் விழுந்து விட்டேன். லொறியிலிருந்து தப்ப முயற்சித்தேன், அப்பொழுது காலில் காயம் ஏற்பட்டது: லொறி சுவருடன் மோதி பின்னல் சென்றுபோக முற்பட்ட போதுபொலிஸ்கன்ஸ்டபிள் ஒருவர் லொறியை கொண்டு போஞர். சம்பவம் நடந்த இடத்தில் கண்ணுடித் துண்டுகள் இருந்தன. சம்பவத்தின் பின் மரக்கிளை முறிந்திருந்தது. இன்ஸ்பெக்டருக்கு இவற்றை காட்டினேன். சம்பவம் நடந்த போது பொங்கல் ஊர்வலம் வரவில்லை. நான் சாவகச்சேரி தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி உப-தலைவராக இருக்கின்றேன்.

விசாரணை அடுத்த மாதம் 17-ம் திகதிக்கு ஒத்திப் போடப்பட்டது.

## பட்டதாரிகளல்லாத ஆசிரிய நியமனம்

கோட்டை, செவ்.

மாவட்டசேவைத்திட்டத்தின் கீழ் பட்டதாரிகள் அல்லாதவர்களை ஆசிரியர்களாக நியமிப்பதற்கு விணப்பங்கள் கோடும் அறிவித்தல் இம் மாதம் 28-ம் திகதி அரசாங்கவர்த்தமானியில் வெளிவரும் எனத் தெரிய வருகிறது.

## போலி தங்க நாணயம் தயாரித்த கோஷ்டி அகப்பட்டது

யாழ்ப்பாணம், புதன்

போலித் தங்க நாணயங்கள் தயாரித்த கோஷ்டி ஒன்று பொலிஸாரிடம் அகப்பட்டுக்கொண்டது.

கொழும்பிலிருந்து வந்த இரகசியப் பொலிஸ் கோஷ்டியொன்று யாழ்ப்பாண இன்ஸ்பெக்டர்கள் உதவியுடன், ஒரு கடைக்குப் பின்னல் இயந்திர உதவியுடன் நாணயங்களைத் தயாரித்துக்கொண்டிருந்த கோஷ்டியைத் கைதுசெய்தது.

## சிரமதானம்

கைதடி, செவ்.

கைதடி மேற்குக் கிராம முன்னேற்றச் சங்கத்தின் முயற்சியால் சிரமதான மூலம் வேம்பவத்தை வீதி சீர்செய்யப்பட்டது. சங்கச் செயலாளர் திரு. ஆர் மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற சிரமதான வேலையில் சுமார் 50 பேர் பங்கு பற்றினர்.

## ஓமந்தூரார் காலமானர்

சென்னை, ஆக.25

சென்னை ராஜ்ய (தமிழ்நாடு) முன்னள் முதலமைச்சர் திரு ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் இன்று சென்னையில் காலமானர்.

---

## வேற்றுமையிலும் ஒற்றுமை காண்க

'பூநகரி, செவ்வாய்

அரசியல் ரீதியிலோ வேறு எந்த வகையிலோ வேற்றுமை இருந்தாலும் அதனை மறந்து எமது முன்னேற்றத்திற்காக நாட்டின் முன்னேற்றத்திற்காக வேற்றுமையிலும் ஒற்றுமை காண வேண்டும்' என பூநகரி காரியாதிகாரி கந்தோரில் நடைபெற்ற இளைஞர்கள் கருத்தரங்கில் தலைமை வகித்துப் பேசிய பூநகரிக் காரியாதிகாரி திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

மானிப்பாய் மூருமலை ஒழுங்கையில் இரு படுக்கை அறைகள், ஸ்நான அறை, மின்சாரம், தண்ணீர் வசதிகள் கொண்ட வீடு பிரபல கல்லூரிகளுக்கு அண்மையில். லான்ட் இன்வெஸ்ட்மென்ட், 6, பிரதானவீதி, யாழ்ப்பாணம். 3084

ஊரியான் வயல் (தெருவோரம்) 15 நெற்பரப்பு கிணற்றுடன் வெங்காயம், பீறுட் பின் நெல்லும் சாகுபடி செய்யலாம். தொடர்பு கொள்ளவும்: திருமதி அ. துரைசிங்கம், 2-ம் ஒழுங்கை, சன்னதி றோட், அச்சுவேலி. 3089

### தேவை

கொழும்பில் ஒரு ஸ்தாபனத்துக்கு மிளகாய் வத்தல் தொடர்ந்து கணிசமாக வழங்கக்கூடியவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக 14, மீரானியாதெரு, கொழும்பு 12. 3081

தமிழ் ஆங்கில அறிவுள்ள லிகிதர் தேவை. மனுச் செய்யவும் 211, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 3091

றைக்கிளீன் செய்ய வரும் உடைகளுக்கு பில் எழுதுபவருக்கு உதவியாளராக 20 வயதுக்குட்பட்ட ஒருவர் தேவை. தேர்ச்சி பெற்றவர் விருப்பத்தக்கது. சாயி றைக்கிளீனேர்ஸ், வெலிங்டன் தியேட்டர் சந்தி, யாழ்ப்பாணம். 3092

இன்று மட்டும்
**வெலிங்டன் சினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
போயா, பிரிப்போயா 2-30
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த
**கணவன்**

**REGAL** JAFFNA
Daily 4-45; 7 & 9-45p.m.
Poya, Pre poya 4 Shows
Ken Clarke
Helga Lime
in
MISSION BLOODY MARY
(Adults only)

MANOHARA JAFFNA

## கேள்வி விளம்பரம்

### அல்லைப்பிட்டி கிராம சபை

1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6-ந் திகதி காலை 10-30 மணி வரை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கு "சீல்" வைத்த கேள்விகள் அல்லைப்பிட்டி கிராமசபை அக்கிராசனரால் ஏற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 25-00 பிணைப்பணமும், ரூபா 5-00 கேள்விப் பத்திரப்பணமும் செலுத்தி அல்லைப்பிட்டி கிராமசபை காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். 4-9-70 திகதி பி. ப. 2-30 மணிக்குப் பின்னர் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. மேலதிக விபரங்கள் அல்லைப்பிட்டிக் கிராம சபை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. அல்லைப்பிட்டி மேற்கு றோட்டு 1969/70.
2. மண்டைதீவு கடல் றோட்டு 1968/69.

செ. தவவிநாயகம்,
அக்கிராசனர்,
அல்லைப்பிட்டி கிராம சபை,
24-8-70. 2420


## "அரிப்பு கிராமத்துக்கு நெசவு நிலையம் வேண்டும்"

முசலி, செவ்வாய்

மன்னார் மாவட்டத்தில் கடற்கரைப் பிரதேசமாக காணப்படும் அரிப்பு என்னும் கிராமத்தில் நெசவு நிலையமொன்றை நிறுவித் தருமாறு அரசாங்க அதிபரையும் முசலிக் காரியாதிகாரியையும் கேட்டுக்கொள்ளும் பிரேரணை அரிப்பு மாதர் கிராமமுன்னேற்றச் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சங்கத் தலைவி அ. மாகிறேற்றம்மா மொறுய்ஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நெசவுநிலையக் கட்டிடம் அமைப்பதற்கான காணியை சட்டநாக்குரவர் வண பிதா மகேந்திரன் கொடுத்துதவுவதாக தெரிவிக்கப்பட்டது.


**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர் - பத்மினி நடித்த
**அரசிளங்குமரி**


# "பத்திரிகை தடையால் கலாசாரம் அழியாது"

## பரிசு எழுத்தாளர் பாராட்டுவிழாவில் கவிஞர் கந்தவனம்

யாழ்ப்பாணம், புதன்

"தமிழ்நாட்டுப்பத்திரிகைகளைத் தடைசெய்வதால், கலாச்சாரத் தொடர்புகள் அழிந்துபோய்விடுமென்று அரசியல் வாதிகளும் மற்றும் சிலரும் கூச்சல் போடுகிறார்கள். தமிழ்நாட்டிலிருந்து இறக்குமதியாகும் 'குப்பை'களால் கலாச்சாரம் அழியமுடியுமா? 'குப்பை' இலக்கியங்களை இறக்குமதி செய்ய கூடாது என்பதைத்தான் நாமும் வற்புறுத்துகிறோம், இவற்றினால் என்றும் நமது கலாச்சாரம் வளரப்போவதில்லை பதிலாக அழிந்து ஒழிந்து போய்விடும்."

இவ்வாறு யாழ். இலக்கிய வட்டத்தின் ஆதரவில் நடைபெற்ற பாராட்டு விழாவொன்றுக்குத் தலைமை வகித்து கவிஞர் திரு வி. கந்தவனம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

'ஈழநாடு' நடாத்திய நாவல் போட்டியில் முதல் பரிசுபெற்ற திரு. சு. இராஜநாயகன், செங்கைஆழியன் ஆகிய இருவரையும் மேற்கு ஜெர்மனி சென்று திரும்பிய திரு. ஜேக்கப்பையும் பாராட்டுமுகமாக யாழ். மலாயன் கபே மேல்மாடியில் இவ்விழா நடைபெற்றது.

"நமது இலக்கிய வழியாக ஒழுக்கமே முதலிடம் பெறுகின்றது. ஒழுக்கத்துடன் அறிவுப்பசிக்குதவக்கூடிய இலக்கியங்கள் உருவாக்கப்படவேண்டும். அறிவுப் பசிக்கு விருந்து கிடைக்காத இலக்கியங்களினால் நல்ல பயனைப்பெற முடியாது" என கவிஞர் கந்தவனம் சொன்னார்.

இரசிகமணி கனகசெந்திநாதன் பரிசுபெற்ற எழுத்தாளர்களைப் பாராட்டிப் பேசும்போது குறிப்பிட்டதாவது:

கவிதை சிறுகதைத் துறையில் இலங்கை எழுத்தாளர்கள் வளர்ச்சியடைந்துள்ள அளவுக்கு நாவல் இலக்கியத்தில் வளர்ச்சி பெறவில்லை இன்று பரிசு பெற்றவர்கள் மூலம் நாம் நாவல்துறையிலும் எதிர் காலத்தில் வளர்ச்சிபெறக் கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன.

கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை பேசுகையில், இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பத்திரிகைகள் இறக்குமதி செய்யப்படுவது போல இலங்கைப் பத்திரிகைகளை இந்தியாவில்இறக்குமதி செய்யக்கூடியவசதியை ஏற்படுத்தவேண்டும் என்றார்.

ஈழநாடு பத்திரிகை ஸ்தாபனத்தின் சார்பாக திரு. எஸ். பெருமாள் பேசினார்.

பரிசுபெற்ற எழுத்தாளர்கள் தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றிதெரிவித்துப்பேசினர்.

மேற்கு ஜெர்மனிக்குச் சென்றிருந்த திரு. பிலிப் ஜேக்கப் தனது அனுபவம் பற்றிக் குறிப்பிடுகையில் இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் ஹிட்லருக்கு எதிரான புரட்சியாக அமையவே ஆண்கள் தமது சிகையை வளர்த்துக்கொள்கின்றார்கள் என்று குறிப்பிட்டார். (கு. வி. ம)

## 'நமது கவிஞர்கள் கௌரவிக்கப்பட வேண்டும்'

உடுப்பிட்டி, செவ்வாய்

'செங்கமலச் சிலம்பொலி ஒரு சோஷலிச நூல். சமுதாயத்தில் நிலவும் குறைபாடுகளைச் சோஷலிசக்கண் கொண்டு பரந்த அடிப்படையில் அணுகிய கவிஞர் 'க வீ.' இலக்கிய ரசனையோடு தனது கவிதைகளை வெளிப்படுத்தியுள்ளார்'

மேற்கண்டவாறு திரு வி. மகாலிங்கம் ஆசிரியர் ஈழத்தின் இலக்கண ஆராய்ச்சியாளர்களில் ஒருவரும் பிரபல கவிஞருமான பண்டிதர் திரு க. வீரகத்தியின் 'செங்கமல சிலம்பொலி என்னும் கவிதைத் தொகுப்பை வெளியிட்டு வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். கரவெட்டி வாணி கலைக்கழகத்தில் இவ் விழா நடைபெற்றது.

திரு வி. மகாலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

கவிதைகளை ஆக்கும் கவிஞர்களே தங்கள் கவிதைகளைப் படிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் நம்மவர்கள் உள்ளனர். இந்த இழிநிலை மாறி எமது நாட்டுக் கவிஞர்கள் தகுந்த முறையில் கௌரவிக்கப்பட வேண்டும். தமிழகப் புத்தகங்களைத் தடைசெய்யும் அரசின் திட்டம் மூலம் எமது கவிஞர்களுக்கும் வாழ்வு பிறக்கலாம்.

நூலாசிரியர் பண்டிதர் திரு க வீரகத்தி பேசுகையில் ஒரு காலத்தில் சோஷியவர்கள்கூட இன்று சோஷலிசத்தின் உண்மையை உணரத் தொடங்கியுள்ளனர் ஆனால் உண்மைச் சோஷலிஸவாதிகளால்தான் நாடும் நாமும் பயன்பெற முடியும். இத்தகைய புத்தகங்களுக்கு அரசாங்கம் ஆதரவு தந்தால் மேலும்பல புத்தகங்களைத் துணிச்சலுடன் வெளியிட முடியும் என்று கூறினார்.

... ...

## புதிய நிர்வாகிகள்

மாவிட்டபுரம், செவ்

பன்னாலை கணேசா சன சமூக நிலையத்தின் 19வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர்புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் சி. சின்னத்தம்பு, உபதலைவர்: சோ. அம்பலவாணர், செயலாளர்: க. திருநாவுக்கரசு, உபசெயலாளர்: வை. ஜெயபாலன், பொருளாளர்: சு. மாணிக்கம், கணக்குப் பரிசோதகர்: செ. வரதராஜப்பெருமாள். நிர்வாகசபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

0 0 0

## அ.இ.சைவ [illegible]ட்டான சபை

அகில இலங்கை சைவ அனுட்டான பாதுகாப்புச் சபை நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்.

[illegible]லைவர் திரு த சிவலிங்

## மானிப்பாய் கி. ச. உப தலைவர்

மாவிட்டபுரம், செவ்

மானிப்பாய் கிராமசபை உபதலைவராக சி. ஜெயசிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் கிராமசபை உபதலைவர் தெரிவு சபா மண்டபத்தில் கிராமசபைத் தலைவர் என். மார்க்கண்டு தலைமையில் நடைபெற்றபோது உப தலைவர் பதவிக்கு சி. ஜெயசி[illegible]ம் க. சுப்பிரமணியம் ஆ[illegible]யார் போட்டியிட்டனர்.

வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது சி. ஜெயசிங்கத்துக்கு 8 வாக்குகளும் க. சுப்பிரமணியத்துக்கு 7 வாக்குகளும் கி[illegible]த்தன.

## கைதடி கி.மு.ச

கைதடி மேற்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவின் போது பின்வருவோர் தெரிவுசெய்யப் பட்டனர்.

தலைவர்: திரு கே சதாசிவம், உப தலைவர்: திரு கே. வேலுப்பிள்ளை, செயலாளர்: திரு ஆர். மயில்வாகனம். உப செயலாளர்: திரு வி. சதிர்காமு. தனாதிகாரி: திரு எஸ். கனகசபாபதி ஆறுபேர் கொண்ட நிருவாக சபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## 'தடைவிதிக்காதீர்'

கோட்டை, செவ்.

சைவசமயக் கருத்துக்களைத் தாங்கிவரும் நூல்கள் சஞ்சிகைகள் இந்தியாவில் இருந்து இறக்குமதியாவதற்கு அரசாங்கம் தடை விதிக்காமல் ஆவன செய்ய வேண்டுமென அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தூது கோஷ்டி ஒன்று தபால் தந்திப் போக்குவரத்து அமைச்சர் திரு' செ, குமாரசூரியரைக் கேட்டுக் கொண்டது.

# மாவட்ட ட்ராக்டர்போட்டி! முடிவு திகதி ஆகஸ்ட் 29

யாழ்ப்பாணம், புதன்

வருகிற முதலாம் திகதி பரந்தன் நெல் நிலையத்தில் நடைபெறவிருக்கும் யாழ்ப்பாண மாவட்ட ட்ராக்டர் போட்டிகளில் வட பகுதியைச் சேர்ந்த படித்த ஆண், பெண் விவசாயிகள் பெருமளவில் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

படித்த வேலையற்ற பெண்ளும். மிருசுவில் படித்த பெண்கள் குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த இளம் பெண்களும், இதில் பங்குகொள்ளவிருக்கின்றனர். யாழ். மாவட்ட விவசாய இலாகா இப்போட்டியை நடத்துகின்றது. இதற்கான விண்ணப்பங்களை இம் மாதம் 29-ம் திகதிக்கு முன்னராக மாவட்ட விவசாய இலாகா, யாழ்ப்பாணம் செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்படவேண்டுமென மாவட்ட விவசாய அதிகாரி திரு. பி. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார். இதற்கான பரிசளிப்பு வைபவம் செப்டம்பர் மாதம் 30-ம் திகதி நடைபெறும். பரிசளிப்பு விழாவில் ஆட்சி மன்ற விவகார அமைச்சர் திரு. கே. பி. இரத்தினாயக்காவும், தபால்தந்தி அமைச்சர் திரு செல்லையா குமாரசூரியரும் கலந்துகொள்வர்.

கிளிநொச்சி றெட்றிக் கோ பூங்காவில் செப்டம்பர் மாதம் 30-ம் திகதி இரவு 5 மணிமுதல் 8-30 மணி வரை நடைபெறும் வைபவத்தில் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு பரிசுகள் வழங்கப்படும். விநோத உடைப்போட்டிகளும், ட்ராக்டர் ஊர்வலப்போட்டிகளும் அன்றைய தினம் இடம்பெறும். இதற்கான நடவடிக்கைகளில் மாவட்ட விவசாய அதிகாரி திரு பி. மாணிக்கவாசர் ஈடுபட்டுள்ளார். (கு, வி ம.)

## நியமனம்

சுழிபுரம், செவ்

தொல்புரத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு அ. நித்தியானந்தன் ஆபிரிக்கா நாட்டிலுள்ள சாம்பியாவில் பிரதம நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார், திரு, நித்தியானந்தன் இவ்வாண்டுபிற்பகுதியில் யாழ்ப்பாணம்வரவுள்ளார்,

## குளம் திருத்தப்படுகிறது

முசலி. செவ்

மன்னார் மாவட்டத்தில் தண்ணீர் பற்றுக்குறையாக காணப்படும் வங்காலைக்கிராமத்தில் உள்ள குளம் திருத்தும் வேலை சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள கிராம மக்களே இதனைச் செய்கின்றார்கள்.

வங்காலை கிராமசபைத் தலைவர் திரு இம்மனுவேல் குரூஸ் கட்டளைக் குரவர் வண பிதா பெனட் கொன்ஸ்டன்டைன் ஆகியோர் குளம் திருத்தும் வேலைக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகின்றனர்.

## தமிழ் நிலைக் கண்காட்சி

யாழ்ப்பாணம், செவ்

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம் அளிக்கும் தமிழ் நிலைக் காட்சி, காரைநகர் இந்துக் கல்லூரி நடராசா நினைவு மண்டபத்தில் இம் மாதம் 27-ம், 28-ம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றது.

கலைக் காட்சியில் தமிழ் நிலத் தோற்றம் இலக்கியம் இசைக்கூத்து, சிற்பம் நூல்கள் ஏட்டுச்சுவடி அச்சுப்

## குருக்களுக்கு பொன்னாடை

மாவிட்டபுரம். செவ்வாய்

குப்பிளான் கற்கரைக் கற்பகவிநாயகர் ஆலய அர்ச்சகர் பிரமஸ்ரீ குமாரராஜக் குருக்கள் ஆலயத்துக்கு செய்தசேவைகளை பாராட்டுமுகமாக ஆலயபரிபாலன

## குடிசைத்தொழில் டைரக்டர் யாழ் விஜயம்

மாவிட்டபுரம், புதன்

வடபகுதிக்கு இன்று விஜயம் செய்யும் கைத்தொழில் குடிசைத் தொழில் டைரக்டர் திரு. டொன் டேவிற் பெரேராவுக்கு பலாலி விமான நிலையத்தில் அமோக வரவேற்பளிக்கப் படவிருக்கிறது.

இதைத் தொடர்ந்து அவர் சுன்னாகம் தச்சு தொழிலாளர்களை சந்தித்து அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துவார் மாலை 3 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறும் பனம் பொருள் உற்பத்தியாளர் சங்க பிரதிநிதிகள் மகாநாட்டில் கலந்து கொள்வார்கள்.

பனம் பொருட்களை நவீன முறையில் தயாரிப்பது குறித்து ஆராய ஒரு 'பனம் பொருள் சபை'யை அமைக்க வேண்டும் என்று இம் மாநாட்டில் வற்புறுத்தப்பட விருக்கிறது.

— —

## சிங்கப்பூர் சென்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Helga Lline
in
MISSION BLOODY
MARY
(Adults only)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Pre-Poya, Poya 4 Shows
Robert Wagner
in
DONT JUST STAND
THERE

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர் - பத்மினி
நடித்த
அரசிளங்குமரி

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர் — விஜயலட்சுமி
நடித்த
உயிர் மேல் ஆசை

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி
நாகேஷ் — ஜெயந்தி
நடித்த
இரு கோடுகள்


வேண்டும். தமிழகப் புத்தகங்களைத் தடைசெய்யும் அரசின் திட்டம் மூலம் எமது கவிஞர்களுக்கும் வாழ்வு பிறக்கலாம்.

நூலாசிரியர் பண்டிதர் திரு க வீரகத்தி பேசுகையில் ஒரு காலத்தில் சோஷலிசத்தை இழிவாகக் கரு

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 26—8—70

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 திரைகானம், 7-45 சித்திரம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 மாணவர் மன்றம்.

இரவு 6-00 வாத்திய இசை, 6-30 பேட்டி 6-45 கண்ணகி வழக்குரை, 7-00 வயலின், 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்திச் சுருக்கம்.

...ட்டான சபை

அகில இலங்கை சைவ அனுட்டான பாதுகாப்புச் சபை நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

...லைவர் திரு த சிவலிங்கம், காரியதரிசி திரு ஆறுமுகசாமி, உப காரியதரிசி திரு இளையப்பா, தனாதிகாரி திரு பொன்னம்பலம் 10 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

புங்குடுதீவு, செவ்.

புங்குடுதீவு முத்துமாரியம்பாள் ஆலய பரிபாலன சபை வருடாந்தக் கூட்டத்தில் புது வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: நா. சோமசுந்தரம், காரியதரிசி: சி. மாணிக்கம், தனாதிகாரி; மு. இராமலிங்கம், 21 பேர் கொண்ட குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

இவ்வாலயத்திற்கு நிரந்தர மின்ஒளி அமைப்பதெனவும் நித்திய மேள வாத்தியசேவை அளிக்க வேண்டுமெனவும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

0 0 0

ஊர்காவற்றுறை, செவ்.

சரவணை-வேலணை மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ந. நாகராசா, உபதலைவர்: திரு. த. இலிங்கப்பிள்ளை, காரியதரிசி: திரு. ச. விசுவலிங்கம் புதிய நிர்வாகசபை அங்கத்தவர்களாக திரு. க. சபாநாயகம், திரு. ச. பொன்னம்பலம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

...விக்கு சி. ஜெயசி... க. சுப்பிரமணியம் ஆகியோர் போட்டியிட்டனர்.

வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது சி. ஜெயசிங்கத்துக்கு 8 வாக்குகளும் க. சுப்பிரமணியத்துக்கு 7 வாக்குகளும் கிடைத்தன.

## புதிய பட்டினசபை உறுப்பினர்



உடுப்பிட்டி, செவ்வாய் சமீபத்தில் நடைபெற்ற நெல்லியடி பட்டினசபைத் தேர்தலில் 4-ம் வட்டார அங்கத்தவராக திரு. சி. செல்லையா தெரிவு செய்யப்பட்டுள்ளார். (வயது 54) ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் பின்னர் எழுதுவினைஞர், கணக்காளர், காரியாலய உதவியாளர் ஆகிய பதவிகளை வகித்து ஓய்வு பெற்ற பின்பு சட்டக்கல்வி பெற்று வழக்கறிஞராக சித்தியெய்தி தற்போது வழக்கறிஞராகக் கடமையாற்றுகிறார்.

கல்லூரி நடராசா நினைவு மண்டபத்தில் இம் மாதம் 27-ம், 28-ம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றது.

கலைக் காட்சியில் தமிழ் நிலத் தோற்றம் இலக்கியம் இசைக்கூத்து, சிற்பம் நூல்கள் ஏட்டுச்சுவடி அச்சுப்பிரதி முதலிய அம்சங்கள் இடம்பெறும். ஓவியம் புகைப்படம் வரைபடம் போன்றனவும் காட்சிக்கு வைக்கப்படும். இசையரங்கு கருத்தரங்கும் இடம் பெறும். (கு.வி.ம)

மாவிட்டபுரம், செவ்வாய் குப்பிளான் கற்கரைக் கற்பகவிநாயகர் ஆலய அர்ச்சகர் பிரமஸ்ரீ குமாரராஜக் குருக்கள் ஆலயத்துக்கு செய்தசேவைகளை பாராட்டு முகமாக ஆலயபரிபாலன சபையார் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

வழக்கறிஞர் க. வைரவநாதன் தலைமையில் பாராட்டு வைபவம் நடைபெற்றது. பலர் பாராட்டுரை வழங்கினர்.

'பணம் பொருள் சபை'யை அமைக்க வேண்டும் என்று இம் மாநாட்டில் வற்புறுத்தப்பட விருக்கிறது.

— —

### சிங்கப்பூர் சென்றார்

பண்டத்தரிப்பு, செவ் வங்காலையைச் சேர்ந்தவண: எமிலியானூஸ் மொறுய்ஸ் சுவாமியார் சிங்கப்பூரில் திருத்தொண்டாற்றுவதற்காக சென்றுள்ளார்,


26-8-70 இன்றுமுதல் குதூகலஆரம்பம்

சர்வதேச திரைப்பட அரங்கில் பாராட்டுப்பெற்ற படம், தென்னகத்திரைகளில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச்சித்திரம்.

நாணயம் சுண்டப்பட்டு மேலே போகிறது. அது கீழே விழும்பொழுது நீங்களே பார்த்துவிட்டுச் சொல்லுங்கள்

பூவா — தலையா?

யாழ்-வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன் ★ ஜெய்சங்கர்
நாகேஷ் ★ எம். ஆர். ஆர். வாசு
ஸ்ரீ காந்த் ★ எஸ். ராமராவ்
ராஜஸ்ரீ ★ வெண்ணிற ஆடைநிர்மலா
குமாரி சச்சு ★ மனோரமா ★ வரலட்சுமி
நடித்த

பூவா தலையா

திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
கே. பாலச்சந்தர்

பாடல்கள்
வாலி

இசையமைப்பு
எம்.எஸ்.விஸ்வநாதன்




இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் யாழ்ப்பாணம் திரைகளில்

தினசரி பி. ப. 3-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்
மற்றும்பலர் நடித்த
'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும்
தெய்வத் தமிழ்க் காவியம்'

துணைவன்

கதை வசனம் பாலமுருகன்
சங்கீதம் K.V.மகாதேவன்
தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்


## குடியேற்ற வாசிகளுக்கு இலவச உப உணவுப் பொருட்கள்

பூநகரி, செவ்வாய் குடியேற்றவாசிகளுக்கு இலவசமாக மா, சீனி, மீன், பால் இறைச்சி போன்றவற்றை இலவசமாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அவரவர்களுக்கு வழங்கப்பட்ட குடியேற்றக் காணிகளில் வசிப்பவர்களுக்கு மட்டுமே இலவச உப உணவுப் பொருட்கள் கிடைக்கும்.

இத்தகவலை காணி விவசாய அதிகாரி திரு. பொன்னம்பலம் நேற்று முன்தினம் முழங்காவிலில் நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

பல்லவராயன்கட்டு குடியேற்றவாசிகள் தங்களது கூப்பன்களை விநாயகபுரம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மாற்றவேண்டுமென்றும், விநாயகபுரம் ப. நோ. கூ. சங்கத்தில் கூப்பன் புத்தகம் உள்ளவர்களுக்கு மட்டுமே விவசாயக் கடன் மற்றும் இலவச உணவுப் பொருட்கள் வழங்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்,

காணி விவசாய அதிகாரி மேலும் கூறியதாவது:

''அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்தைக் குறிப்பிட்ட சங்கத்திற்கு மாற்றாதவர்களுக்கு எவ்வித சலுகைகளையும் அரசாங்கம் செய்யமாட்டாது. விவசாய உபகரணங்கள் இவர்களுக்குக் கிடைக்காமல் போய்விடும். இலவச உப உணவுப் பொருட்கள் இம்மாத இறுதிகுள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் அதற்கு முன்னரா அரிசிப் புத்தகங்கள் மாற்றப்படவேண்டும்'

கிணறு வெட்டுபவர்கள் செப்டெம்பர் மாதம் 15ம் திகதிக்கு முன்னராக தங்களது வேலையை முடிக்க வேண்டும். புதிதாக கிணறு வெட்டுவதைநிறுத்திவைக்க வேண்டும்.''

மேட்டுக் காணிக்குத் தேவையான தென்னை, மா, பலா, எலுமிச்சை போன்ற மரங்கள் தேவையானவர்கள் உடனடியாகக் குடியேற்றப் பொறுப்பதிகாரியிடம் தெரிவிக்கும்படியும் காணி விவசாய அதிகாரி கேட்டுக்கொண்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்காசிய அமைதிப் பேச்சு நியூயோர்க்கில் ஆரம்பம்

## நிரந்தர தீர்வுகிடைக்குமென ஜாரிங் நம்பிக்கை

நியுயோர்க், ஆக. 25

மேற்காசியாவில் ஏற்பட்டுள்ள 90 நாள்போர் ஓய்வு முடிவடைவதற்குள் மேற்காசியப் பிரச்னைக்கு நிரந்தரமானநல்லதொருதீர்வுகாண முடியுமென்ற நம்பிக்கையிருப்பதாக மேற்காசியப் பிரச்னைக்குப் பொறுப்பான ஐ. நா. விசேஷதூதர் டாக்டர் குனூர்ஜாரிங் தெரிவித்தார்.

மேற்காசியப் பிரச்னைக்கு அமைதித்தீர்வு காண்பதற்கான சமாதானப் பேச்சு வார்த்தைகள் இன்று நியூயோர்க்கில் ஆரம்பமாகுமென்று டாக்டர்ஜாரிங்கூறினூர். இஸ்ரேல் ஐக்கிய அரபுக் குடியரசு ஜோர்டான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளுடன் டாக்டர் ஜாரிங் தனித்தனியாகப்பேச்சுவார்த்தை நடத்துவார் பின்னர் வெளிநாட்டு மந்திரிகள் கட்டத்தில் சமாதானப் பேச்சுத் தொடரும்.

நியுயோர்க் சமாதானப் பேச்சு சம்பந்தமாக ஐக்கிய அரபுக்குடியரசு அவதானத்துடன் நம்பிக்கைதெரிவித்தது.

ஐ. நா.பாதுகாப்புச் சபை 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் நிறைவேற்றியதீர்மானத்தை அமுல் நடத்துவதன் மூலம் சமாதான முயற்சிவெற்றிபெறுவதற்கு செயலில் உதவுவது இஸ்ரேலையே பொறுத்திருக்கிறதென்று கெய்ரோ கூறியது.

இதேசமயம் சூயஸ் கால்வாய்ப்பகுதியில் இஸ்ரேல் போர் ஓய்வை மீறிவருவதாக ஐக்கியஅரபுக்குடியரசு உதவி அதிபர் குற்றம் சாட்டினூர்.

## ஆந்திராவில் மழைக்கு 19 பேர் பலி

ஹைதராபாத். ஆக 25

ஆந்திராவில் கடந்த சில தினங்களாக ஏற்பட்டுள்ள மழை காரணமாக இதுவரை 19 பேர் பலியாகியிருக்கிறூர்கள். நூற்றுக்கு மேற்பட்டவர்கள் வீடுகளை இழந்திருக்கிறூர்கள். ஹைதராபாத்தில் நேற்று மாத்திரம் 4 பேர் பலியாஞர்கள்

## கம்போடியாவுக்கு அமெரிக்கா இராணுவ உதவி

வாஷிங்டன், ஆக.25

கம்போடியாவுக்கு அமெரிக்கா இராணுவஉதவி அளிக்கவிருக்கும் செய்தியை அமெரிக்க ராஜாங்க இலாகா இன்று ஊர்ஜிதம் செய்தது.

சிறுரகஆயுதங்கள்போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவற்றை கம்போடியாவுக்கு அமெரிக்கா உதவியாக வழங்கும் நான்கு கோடி டாலர்பெறுமதியான உதவி முதல் கட்டமாக இருக்கும் இவற்றுடன் கம்போடியத் துருப்புக்களுக்கு அமெரிக்கா இராணுவப் பயிற்சியுமளிக்கும்.

# 'சுயபாஷை ஆசிரியர்களுக்கும் சேவை நீடிப்பு வசதி வேண்டும்'

## தமிழாசிரியர் சங்கக்கூட்டத்தில் பேச்சு

உரும்பராய், செவ்.

'எதிர்காலத்தில் நல்ல சந்ததியினரை நாட்டுக்கு உதவும் பெரும்பணியைச் செய்பவன் ஆசிரியன் நாட்டுக்கு வேண்டிய நல்ல அடிப்படைக் கல்வியை ஊட்டி வளம்படுத்த வேண்டிய ஆசிரியனுக்கு கல்வியுலகில் சமசந்தர்ப்பம் வழங்கவேண்டும். இந்த நாட்டில் கடந்த காலங்களில் திட்டமற்ற ஆசிரியர் இடமாற்றத்திஞல் கல்வி நிலை சீரழிந்திருந்தது. இப்பொழுது பதவியில் இருக்கும் அரசாங்கம் ஆசிரியர்களது மாற்றங்களைக் கவனிப்பதற்கு ஆசிரிய தொழிற்சங்க ஊழியர்களையும் உள்ளடக்கிய ஒரு மாற்றச் சபையை நியமிக்க உத்தேசித்திருப்பது வரவேற்கக்கூடியதே'

யாழ்ப்பாணம் ஆசிரியர் சங்கக் கந்தோரில் நடைபெற்ற வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தினதும் கிளைச் சங்கத்தினதும் நிர்வாகிகள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பேசிய வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் பண்டிதர் ச. பொன்னுத்துரை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. பொன்னுத்துரை மேலும் பேசியதாவது:-

இன. மத மொழி வேறுபாடற்ற முறையில் சகல ஆசிரிய தொழிற் சங்கங்களின் சார்பிலும் ஒவ்வொரு ... கத்தவர்களின் கஷ்ட நஷ்டங்களை எடுத்துக் கூறிநீதி பெற முடியும். கணிசமான தொகையுள்ள அங்கத்தவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் மத்திய மாற்றச் சபையிலும் பிராந்திய இடமாற்றச் சபைகளிலும் இடம் பெறல்வேண்டும்

'விசேட பாடங்கள், விசேட தகுதியுடையவர்களுக்கு 55 வயதுக்குப்பின் சேவை நீடிப்பு வழங்க அரசாங்கம் உத்தேசித்திருப்பதுபோல சுயபாஷை ஆசிரியர்களுக்கும் சேவை நீடிப்பு விஷயத்தில் அரசாங்கம் கருணை காட்ட வேண்டும்.

சுயபாஷைகளைக் கற்பிப்பதற்கென்றே பயிற்சி பெற்றவர்கள் சுயபாஷைகளைக் கற்பிப்பதில் விசேட தகுதி வாய்ந்தவர்களேயாவர். சுயபாஷைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துவரும் இந்நேரத்தில் சுயபாஷை ஆசிரியர்களுக்கு 60 வயது வரையும் சேவை நீடிப்பு வழங்க வேண்டுமென்று அரசாங்கத்திற்கு நாம் வேண்டுகோள் விடுப்பது நியாயமானதே'

வட பகுதிப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களதும் ஆசிரியர்களதும் கஷ்டங்களை போக்குவதற்கு வழிசெய்யுமுகமாக ஆசி... ... அரசியற் கட்சிப் பிரமுகர்களைக் ... டது.

பண்டிதர் சி. கா. தம்பையா, திரு. இ. பொ. குமாரசாமி, த. இராசேந்திரம், பண்டிதர் வி வ. நல்லதம்பி உட்படப் பலர் பேசினர்

## இந்தியா செல்வோர்

# தங்கநகைகளை எடுத்துச் செல்லவியலாது

கோட்டை, செவ்வாய்

இந்தியாவுக்கு அடிக்கடி பிரயாணம் செய்யும் மகளிர் விலைமதிப்புள்ள ஆபரணங்களை எடுத்துச்செல்ல இனிமேல் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இவ்வாறு இந்தியாவுக்குச் செல்லும் பெண்கள் இங்கிருந்து செல்லும்போது கை, கழுத்து நிறைய தங்கநகைகளை அணிந்துகொண்டு செல்கிறூர்கள் என்பதையும் பின்னர் திரும்பும் போது இவையின்றியே திரும்புகிறூர்கள் என்பதையும் சுங்க அதிகாரிகள் கவனித்துள்ளனர் சிலர் திரும்பும்போது தாங்கள் கொண்டுபோன தங்க நகைகளைவிடுத்து பித்தளைப் பொருட்கள் பலவற்றைக் கொண்டு வருகிறூர்களாம். கடந்தவாரம் முதன் முதலாகஇந்தியாவுக்குப் பிரயாணமான ஒரு பெண்மணி ஒரிடசினுக்கு அதிகமா தங்க வளையல்களை அணிந்திருந்தாரெனவும் அவரை வற்புறுத்திச் சுங்க அதிகாரிகள் அந்தககாப்புகளைப்போட்டுக் கொண்டு செல்லவிடாமல் தடுத்துள்ளார்கள் எனவுப் தெரியவருகிறது.

## தமிழ் சஞ்சிகை இறக்குமதி

# 'பிரதிநிதித்துவம் வாய்ந்த

# வெங்காயம் கொள்வனவு செய்ய கூ.மொ.வி. நடவடிக்கை

## தலைவர் தகவல்

மாவிட்டபுரம், செவ்வாய்

கூட்டுறவுமொத்தவிற்பனவு நிலையத்தில் சேவையாற்றும் ஊழியர்களுக்குப் பென்சன் வழங்கும் திட்டமொன்றை அரசு உருவாக்க நடவடிக்கை எடுக்கிறது.'' இத்தகவல்களைக் கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகா உப தலைவர் திரு. பண்டாரநாயக்கா யாழ். கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்தில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

யாழ். சி. டபிள்யூ. ஈ. துணி விற்பனவு நிலைய மனேஜர் திரு. தம்பி ஐயா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''தொழிலாளர்கள் பலவித கஷ்டங்களுக்குஉள்ளாவதை நாம் கண்கூடாகக் காண்கிறூம். தொழிலாளர்கள் கஷ்டமடையாமல் திறமையுடன் சேவையாற்றிஞல் தான் நிர்வாகம் சிறப்பாக நடைபெறும். இதஞல்தான் நாம் தொழிலாளர் பிரச்னைகளைத் தீர்க்க அக்கறை காட்டிவருகிறூம்.''

யாழ். கூ. மொ. வி. தலைவர் திரு. ஒபயசேகரா பேசியதாவது:

''இது எங்கள் ஸ்தாபனம் என்ற கொள்கையுடன் ஒவ்வொரு தொழிலாளரும் கடமையாற்ற வேண்டும். இதனுடைய நிர்வாகப் பொறுப்பு உங்கள் கையில் தான் தங்கியுள்ளது. தொழிலாளர்கள் நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்த ஒத்தாசை புரியவேண்டும். சாதாரண பாமர மக்களும் பயனடையத்தக்க வகையில் இந்த ஸ்தாபனத்தை புதிய முறையில் நடத்த விரும்புகிறூம். இதற்குத் தொழிலாளர்கள் பூரண ஆதரவு கொடுக்கவேண்டும்

இங்கு தேங்கிக் கிடக்கும் வெங்காயத்தை எடுக்க நாம் நடவடிக்கை எடுக்கிறூம். வெளிநாட்டிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் வெங்காயத்தைத் தடைசெய்ய நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.''

சமசமாஜக் கட்சிப் பிரமுகர் திரு.அ.விஸ்வநாதன் உட்படப் பலர் பேசினர்.

## இராணுவம் உஷார்

கல்கத்தா, ஆக. 25

மேற்கு வங்காளத்தில் நாளை ஆரம்பமாகவிருக்கும் வேலைநிறுத்தத்திஞல் ஏற்படக்கூடிய நிலைமைகளைச் சமாளிப்பதற்காக இராணுவத்தை உஷார் நிலையிலிருக்கும் படிஅரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.



## நயினை - நல்லூர் பஜனைப் பாதயாத்திரை

ஊர்காவற்றுறை, செவ்,

திவ்வியஜீவனசங்க சைவ அடியார்களின் பஜனைப் பாதயாத்திரையொன்று நல்லூர் கந்தசுவாமிகோவில் தேர்த் திருவிழாவையொட்டி இம்மாதம் 29-ம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப் படவிருக்கிறது.

நயினுதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் இம்மாதம் 28-ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஐந்து மணியளவில் நடைபெறும் விசேட பூசை, ஆராதனை வழிபாட்டுடன் பாதயாத்திரை ஆரம்பமாகும்.

புங்குடுதீவு மேற்கு, கலட்டி. புங்குடுதீவு கிழக்கு, வேலணை, மண்கும்யான், பண்ணை வழியாக பாதயாத்திரீகர்கள் நல்லூரைச் சென்றடைவார்கள்.

புங்குடுதீவு 'நால்வர்' நன்னெறித் திருமடத்தில் யாத்திரீகர்களுக்கு வரவேற்பளிக்க ஏற்பாடாகியுள்ளது.

புங்குடுதீவு ஸ்ரீ சதானந்த சுவாமிகள், நாவலப்பிட்டி திரு முத்தையா, புளியங்கூடல் யோகி, திரு பொன்னுச்சாமி, திருப்பூங்குடி ஆறுமுகம், நயினை சண்முகநாதபிள்ளை காரைநகர் திரு. மு கு சுப்பிரமணியம் ஆகியோர் பாதயாத்திரையில் பங்குபற்றுவார்கள்.

இ.போ.ச. சேவை

## மக்கள் பாராட்டுகின்றனர்

பருத்தித்துறை, செவ்.

பருத்தித்துறை இ. போ. ச. வினரின் சிறந்த சேவையைப் பாராட்டிப் பொது மக்கள் தினசரி பிராந்திய முகாமையாளருக்குப் பாராட்டுத் தெரிவிக்கின்றனர். சிலர் நேரிற் சென்றே பாராட்டுகின்றனர்' என நேற்று முன்தினம் பருத்தித்துறை இ. போ. ச. புதிய கட்டிடத் திறப்பு விழாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையின்றியே திரும்புகி றார்கள் என்பதையும் சுங்க அதிகாரிகள் கவனித்துள்ள தடுத்துள்ளார்கள் எனவும் தெரியவருகிறது.

## தமிழ் சஞ்சிகை இறக்குமதி

# 'பிரதிநிதித்துவம் வாய்ந்த குழு ஆராய வேண்டும்'

கோட்டை. செவ்

தமிழ் சஞ்சிகைகள் இறக்குமதி செய்யப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்கு எழுந்த முயற்சியின் அடிப்படை நோக்கம் வரவேற்கப்பட வேண்டியது' எனக் கூறும் தீர்மானம் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் இலக்கியக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரு குழு சஞ்சிகைகளைக் கட்டுப்படுத்துவதனால் ஏற்படும் பலாபலன்களை நன்கு ஆராய்ந்த பின்பே எந்த நடவடிக்கையையும் எடுக்க வேண்டும் என்றும் இவ் விடயங்கள் குறித்து ஒரு முடிவு செய்வதற்கு முன்னர் கொழும்புத் தமிழ்ச் சங்கம் தனது கருத்தைத் தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் தருமாறும் கோரும் தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டன.

# 'ஒவ்வொரு பிள்ளையும் பாடசாலை செல்ல வேண்டும்'

முசலி, செவ்

ஒரு குழந்தையின் வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவை அதனுடைய பள்ளி வாழ்க்கையிலேதான் முழுவதும் தங்கியுள்ளது. பள்ளி வாழ்க்கையில் அடக்கம் தாழ்மை, பிறசிநேகம், போன்ற நல்ல பண்புகளை பழகிஅனுசரிக்கும் குழந்தை பிற்காலத்தில் சிறந்தபிரஜையாகவரும் எனவே ஒவ்வொரு பிள்ளையும் சிறுவயதில் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் என முசலி சிலாவத்துறை அல்-ஹருமகா வித்தியாலயத்தில் நடந்த பெற்றோர் தின பரிசளிப்பு விழாவில் மன்னார் பிரதம கல்வி அதிகாரி திரு. ஆர். திருநாவுக்கரசு கூறினார்.

இவ்விழாவை முசலிமகா வித்தியாலய பெற்றோரும், ஆசிரியர்களும் ஒழுங்குசெய்திருந்தனர்.

# யாழ். நகரில் சைவசமய கலைவிழா

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கச் சைவசமயக் கலைவிழா இம்மாதம் 29ந் திகதி யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

திருமுறைப் பண்ணிசை, சைவசமய நாடகம், நடனம். திருமுறை. ஓவியக் கண்காட்சி ஆகியவை இவ் விழாவில் முக்கிய இடம் பெறும். வடபகுதி வித்தியாதிபதி திரு. வி. சங்கரலிங்கம் இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

# குறிஞ்சாத்தீவு உப்பளம் பெருஞ்செலவில் விஸ்தரிப்பு

ஆனையிறவு, செவ்

ஆனையிறவில் உள்ளகுறிஞ்சாதீவு உப்பளத்தில் பல லட்சரூபாய் செலவில் விஸ்தரிப்புவேலைகளை மேற்படி உப்புக் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பதிகாரி திரு. எஸ். கனகநாயகம் மேற்கொண்டுள்ளார். இதன் மூலம் பலருக்கு வேலைவாய்ப்புக்கிடைத்துள்ளது. இவ்வருடம் இங்கு அமோக உப்புவிளைச்சல் எதிர்பார்க்கப்படுகிறது. பெரும்பாலும் இவ்வருடக் கடைசியில் உப்பு எடுக்கலாமென எதிர் பார்க்கப்படுகிறது.

— —

# சீனக் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு

கோட்டை, செவ்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான கனு சன்யால் கைது செய்யப்பட்டதற்காக இலங்கை சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

துறை [illegible] குறிப்பிட்டார்.

திரு. பொன்னுத்துரை மேலும் பேசியதாவது:-

இன, மத மொழி வேறுபாடற்ற முறையில் சகல ஆசிரிய தொழிற் சங்கங்களின் சார்பிலும் ஒவ்வொரு பிரதிநிதியேனும் இடமாற்றச் சபைகளில் இடம்பெற வேண்டியது மிகவும் முக்கியம். அப்பொழுதுதான் ஒவ்வொரு பிரதிநிதியும் தங்கள் தங்கள் சங்க அங்கத்தவர்களின் [illegible]

வட பகுதிப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களதும் ஆசிரியர்களதும் கஷ்டங்களை போக்குவதற்கு வழிசெய்யுமுகமாக ஆட்சி [illegible]ப்பினர்கள், அரசியற் கட்சிப் பிரமுகர்களைக் கொண்ட ஒரு கருத்தரங்கைக் கூடிய விரைவில் வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கச் சார்பில் நடாத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்

## நான்கு மாதங்களாகியும்

# மக்கள் கோரிக்கை கவனிக்கப்படவில்லையாம்

உடுப்பிட்டி, செவ்வாய்

மந்திகை பஸ் நிலையத்தில் மின்சார வெளிச்சமில்லாததால் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரிக்கு வந்து செல்லும் வவனியா, முல்லைத்தீவு. அச்சுவேலி, கோப்பாய் போன்ற தூர இடங்களைச் சேர்ந்த நோயாளர்களும், பிரயாணிகளும் இரவு நேரங்களில் கும்இருட்டில் பஸ்ஸிற்காகக் காத்துநிற்க வேண்டி உள்ளது'

இதனால் பஸ் நிலையத்தில் நிற்கும் இளம் பெண்கள் எந்த நேரமும் அபாயத்தை எதிர்நோக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். இருட்டைப் பயன்படுத்திக் காடையர்கள் பிரயாணிகளிடம் சேஷ்டை செய்து வருகின்றனராம் இந்த பஸ் நிலையத்தினருகே ஒரு கள்ளுக்கொட்டிலும் இருப்பதால் பிரயாணிகள் குடிகாரர்களின் தொல்லைக்கும் ஆளாக வேண்டியவர்களாக விருக்கின்றனராம்.

பிரயாணிகள் இரவுநேரங்களிலும் பயமின்றிநிற்பதற்காக இந் நிலயத்திற்கு மந்திகை ஆஸ்பத்திரிக்குச் செல்லும் மின்சாரத்திலிருந்து மின்சார வெளிச்சம் இணைத்துத் தருமாறு 232 பேர்களின் கையெழுத்துக்களைக் கொண்ட மகஜர்கள் மின்சாரப் பகுதிக்கும், புலோலி கிராமசபைத்தலைவருக்கும் அனுப்பிவைக்கப்பட்டு நான்கு மாதங்களாகி விட்ட போதிலும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையென்று புகார் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது சம்பந்தமாக உடுப்பிட்டி, பருத்தித்துறை எம். பிக்களுக்கு முறையிடப் பட்டுள்ளது.

— —

# தமிழ் ஊழியர் அதிருப்தி

கோட்டை, செவ்வாய்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபன தமிழ் ஊழியர்கள் தங்களுக்கு நடத்தப்பட்டுவந்த சிங்கள வகுப்புகள் தடைப்படுத்தப்பட்டுள்ளதால் அதிருப்தியடைந்துள்ளார்கள்.


கூட்டுஸ் தாபனத்தில் சிங்களம் கற்பிக்க அரசகரும மொழி இலாகா ஒரு சிங்கள ஆசிரியரை அனுப்பியிருந்தும் நிர்வாகத்தினர் சிங்கள வகுப்பு நடைபெறுவதற்கு வசதியாக இடம்கொடுக்காததனால் வகுப்புகள் தடைப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# நிலப்பறி இயக்கத்தை கைவிட்டால் மன்னிப்பு

சென்னை, ஆக. 25

தமிழ்நாட்டில் நிலப்பறி இயக்கத்தை கம்யூனிஸ்ட் கட்சி கைவிட்டால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள கம்யூனிஸ் கட்சித் தொண்டர்களை விடுதலை செய்வதுபற்றித் தாம் பரிசீலனை செய்யமுடியும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி தெரிவித்தார். நிலப்பறி இயக்கத்தைக் கைவிடுவதாகக் கம்யூனிஸ்ட்கட்சி அறிக்கைவிட வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

இதே சமயம் தமிழ்நாட்டில் நிலப்பறி இயக்கம் சம்பந்தமாகக் கைதுசெய்யப்பட்டுள்ள பன்னீராயிரம் பேரும் விசாரணை செய்யப்படவிருக்கின்றனர். இதற்கென மூன்றுவிசேஷ நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எளில் மிகு

கோயா

வாசனைப்பவுடர் . பாவித்து ஒய்யார மாதராய்த் திகழுங்கள்.

கோயா — உலகின் மதிமிகு செழுமைப் பவுடர் - உங்களை அரவணைக்கையில் வாசனையூட்டவல்லது. தன் இழை - நயத்தால் உங்களைக் கார்த்தணைத்து நாள் முழுவதும் சுகந்த மலர்ச்சியுடன் விளங்க வைக்கும். மற்றெல்லாப் பவுடர்களையும் விட அதி மிருதுவானது, மென்மைப்பட்டினைப் போன்றது. பரிவசமூட்டும் நறுமணம் கொண்ட கோயா வாசனை நிறைந்தது. அழகு உருவில் உங்களை ஆழ்த்தவல்லது. செல்லுமிடமெல்லாம் இன்னயம் பொலிந்து, உன்னத ஆடவரை தன்னயம் இழக்கச் செய்வீர்கள்.

பரிஸ், லண்டன், நியூயார்க் நகரங்களின் கோயா, உலகின் எளில் மிகு நவநாகரிக நளின் நங்கையரால் விரும்பிப் பாவிக்கப் படுகிறது.

என்டைஸ், கார்டீனியா, வைல்(ட்)சில்க், லவ் அவ்பையர், பிளக்ரோஸ், நம்:-5, ஆகியவற்றிலிருந்து உங்கள் அபிமான பவுடரைத் தேர்ந்தெடுங்கள்.




இவற்றுக்கனைய கோயா சோப்களும் உள.

கோயா பரிஸ், லண்டன், நியூயார்க் நகரங்களின் நவநாகரீக நங்கையரால் பாவிக்கப்படும் செழுமைப் பவுடர் உங்களையும் எளில் மிகு நளின் நங்கையராக்கட்டும்.

இப்பொழுது புதிய நெடும் அழகு டின்களில் கோயா பவுடர் கிடைக்கிறது. விலையில் மாற்றமில்லை.

Grant-6(t)-143-9


யைப் பாராட்டிப் பொது மக்கள் தினசரி பிராந்திய முகாமையாளருக்குப் பாராட்டுத் தெரிவிக்கின்றனர். சிலர் நேரிற் சென்றே பாராட்டுகின்றனர்' என நேற்று முன்தினம் பருத்தித்துறை இ. போ. ச. புதிய கட்டிடத் திறப்பு விழாவில் பேசிய இ. போ. ச. பிராந்திய முகாமையாளர் திரு என். நாகரத்தினம் குறிப்பிட்டார்.

மேற்படி இ. போ. ச. நிலைய பொறியியல் பகுதியைச் சேர்ந்த முகாரிகளும் பொறியியல் அதிகாரி திரு டி. ஜி. கித்துதாசவும் மற்றும் தொழிலாளரும் திறமையுடன் கடமையாற்றியதன் விளைவாகப் பொது மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். உத்தேச மக்கள் சபை இயங்க ஆரம்பித்த பின்னர் இன்னும்கூடுதலான சேவையைப் பருத்தித்துறை இ. போ. ச. பொதுமக்களுக்குச் செய்யக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்குமென்றும் பொதுமக்களின் ஆலோசனை அடிப்படையில் பல சீர்திருத்தங்களைச் செய்ய முடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

— —

# நாடு பூராவும் வீடு கட்டுவதற்கு பனை மரம்

கொழும்பு, திங்கள்

பனைமரத்தைக் கொண்டு வீடு கட்டுவது பற்றி ஆராய்வதற்குத் தேசிய சிறு கைத்தொழில் வீடு கட்டும்பகுதி முடிவுசெய்துள்ளது. இதற்காக நிபுணரைக் கொண்ட குழுவொன்று யாழ்ப்பாணம் வரவிருக்கின்றது. நாடு பூராவும் பனைமரங்களை உபயோகித்து வீடு கட்டும் திட்டம் பற்றி இக்குழு ஆராயும்.

றப்பர் மரப் பலகையில் இரசாயனங்களைச் சேர்த்து புதிய பலகைகளைச் செய்வது பற்றி ஆராயப்படுமென்றும் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. ரி.பி. சுபசிங்கா கூறினார்.

— —

## இராணுவத்தில்

# முஸ்லிம் றெஜிமண்ட் வேண்டும்

கோழிக்கோடு, ஆக. 25

இந்திய இராணுவத்தில் 'முஸ்லிம் றெஜிமெண்ட்' ஒன்று நிறுவப்படவேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. கேரள ராஜ்ய முஸ்லிம் லீகின் ஆட்ஹாக் கமிட்டியே இக்கோரிக்கையை எழுப்பியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

வயோதிப வயதுவரை ஒழுக்கம் நிலைத்திருப்பது இனிமை தரும்; அறவழியில் உறுதியான நம்பிக்கை கொள்வது இனிமை தரும்; அறிவை அடைவது இனிமை தரும்; தீச்செயல்களை விலக்குவது இனிமை தரும்.

— புத்தர்.


# ஈழநாடு

Eelanadu National (Tamil) Daily
Telegram: "EELANADU" Jaffna;
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆவணிமாதம் 10-ந் திகதி (26-8-70)


## நல்ல கருத்து

மேடைப் பேச்சுக்களால் நாட்டின் பிரச்னைகளைத் தீர்க்கமுடியாதென்று பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா ஒரு வைபவத்தில் கூறியிருப்பதும் சோஸலிஸம் என்ற பெயரில் காடைத்தனத்துக்கு ஊக்கமளிக்கும் வகையில் சில அரசியல்வாதிகள் பொது மேடைகளில் நின்று பேசுவது எந்தவிதத்திலும் நாட்டுக்கு நன்மையளிக்க மாட்டாதென்று தெகியோவித்தைப் பிரதிநிதி திரு தனபால வீரசேகரா தெகியோவித்தத் தொகுதியில் தலாவா என்ற இடத்தில் ஒரு கூட்டத்தில் பேசியிருப்பதும் சிந்தனைக்கு உரியவை.

மேடைப்பேச்சின் மூலம் மட்டுமல்ல அறிக்கைகள் விடுவதன் மூலமும் சமூகத்தையும் நாட்டையும் முன்னேற்றமடையச் செய்ய முடியுமென்று சிலர் நம்புகிறார்களோ, அல்லது ஏமாற்றலாமென்று நம்புகிறார்களோ வென்று சொல்லமுடியாது. மேடைப் பேச்சினால்தான் பல பிரச்னைகள் தோன்றுகின்றன வென்பது நமது நாட்டின் கடந்த கால அனுபவங்களிலிருந்து அறியக்கூடியதாகவிருக்கிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆட்சி மன்றக் குழுக் கூட்டத்தில் சில தினங்களுக்கு முன் பேசிய பிரதமர் கண்டபடி எதையும் பேசவேண்டாம் என்று சுதந்திரக்கட்சி உறுப்பினர்களுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார் நிலைமையை உணர்ந்து தக்கசமயத்தில் அவர் இந்த எச்சரிக்கை விடுத்திருக்கிறாரென்றே கொள்ளவேண்டும்.

தமது கட்சி உறுப்பினருக்கு 'பேசுவதை அளந்து' பேசுங்கள் என்று எச்சரிக்கை விடுத்ததுமல்லாமல் மேடைப்பேச்சில் தமக்கு நம்பிக்கையில்லையென்றும் செயலில்தான் ...

சமயம் தெகியோவித்தைப் பிரதிநிதி சோஷலிஸம்என்ற பெயரில் 'காடைத்தனத்தை தூண்டிவிடுவோர் பற்றி எச்சரிக்கை செய்திருப்பதும் கவனத்துக்குரியது.

'சோஷலிஸம்' பற்றி பலரும் பலவிதமாக வியாக்கியானம்செய்யத் தொடங்கியுள்ளனர், தமிழர் சோஷலிஸ முன்னணி, இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி, கிறிஸ்தவ சோஷலிச முன்னணி, ஜனநாயக சோஷலிச முன்னணி என்று இனமத அடிப்படையில் சோஷலிஸ முன்னணிகள் அமைக்கப் பட்டுள்ளன. சோஷலிசத்தில் இன, மத, சமூக வேறுபாடுகள் உண்டா?

ஜனநாயகம் என்றால் என்ன என்பது பற்றி இன்னமும் சரியான விளக்கம் பல்வேறு இனமதமக்கள் வாழுகின்ற நாடுகளில் தெளிவாக்கப்படவில்லை, ஜனநாயகத்துக்கும் விளக்கம் இல்லாமல் சோஷலிஸத்துக்கும் சரியான அர்த்தம் தெரியாமல் ஜனநாயக சோஷலிஸத்தை எப்படிச் செயல்படுத்தமுடியும்?

ஜனநாயகம் என்பதுபற்றியும் சோஷலிஸம் என்பது பற்றியும் வரையறைசெய்யப்படாதவரை இந்த மனக் குழப்பங்கள் நேரிடலாம்.

இதற்கு ஒருவரை முறை விதிவகுத்து அதைத்தெளிவு படுத்தினால் திரு. தனபால வீரசேகரா சொல்வதுபோல் சோஷலிஸத்தின் பெயரால் காடைத்தனம் ஏற்பட இடமிருக்காது.

பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா கருதுவது போல்பேச்சைக் குறைத்து இந் நாட்டுமக்களின் குறைகளைத் தீர்க்க ஆளும் நிலையிலுள்ளவர்களும் அவர்களை ஆட்சிபீடத்திலமர்த்துவதற்குத் தாங்கள் தான் காரணமென்றும் சொல்லிக்கொள்பவர்களும் செயலில் அதாவது யாரையும் பழிவாங்குவது தான் சோஷலிஸம் ...

## இலங்கை வானொலி ரசிகர்களுக்கு ஒரு பிரச்னை

# தென்னிந்திய சினிமாப்பாடல்களை 'ஒழிக்கலாமா?'

உலக நாடுகளில்பொது சனத்தொடர்புகளின் உபயோகம் வளர்ந்துள்ளது போல் இலங்கையில் இன்னமும் வளர்ச்சியடையவில்லை. பத்திரிகைகளும் வானொலியும் மட்டுமே இலங்கை மக்களுக்கு பொழுது போக்கு வசதிகளை அளித்து வருகின்றது. பத்திரிகைகளுடன் போட்டி போட்டுக் கொண்டு வானொலி இன்று நம் மத்தியில் அதிக செல்வாக்குப் பெற்று வாழ்க்கையோடு ஒன்றியதாக இடம் பெற்று விட்டது 1967-ம் ஆண்டு ''மார்க்கற் றிசேச் கம்பனி ஒவ்சிலோன் லிமிட்டட்'' (Market Resech Company limited) நடாத்திய பரிசீலனைப் புள்ளி விபரங்கள் அத்தாட்சியாக இருக்கிறது.

புள்ளி விபரங்களின் படி வானொலி கிராமப்புற ரீதியிலும் நகரப்புற ரீதியிலும் மக்களிடையே அதிக செல்வாக்குப் பெற்றுள்ளது. கொழும்பில் மட்டும் வளர்ந்தோரில் தினமும் 60 வீதத்தினர் வானொலியைக் கேட்கத்தவறுவதில்லை வானொலியில் ஒலிபரப்பாகும் அரசியல் பொது விவகாரங்களைப் பெண்களிலும் பார்க்க ஆண்கள் கூடுதலாகக் கேட்கிறார்கள் இவற்றில் பெரும்பாலும் பெண்கள் அக்கறை காட்டுவதில்லை என்பது பரிசீலனையில் இருந்து அறிய முடிகிறது.

### முதலிடம் சிங்கள சேவை

அகில இலங்கை ரீதியில் ஒலி பரப்புக்கூட்டுஸ்தாபனத்தின் நிகழ்ச்சிகளில் அதிகம் விரும்பிக்கேட்கும் ஒலிபரப்பு சிங்கள ஒலிபரப்பின் வர்த்தகசேவையாகும். அதே போல் தமிழ் ஒலிபரப்பில் தமிழ்வர்த்தகசேவையாகும் சிங்கள ஒலிபரப்பில் இரண்டாவது இடத்தைப் பெறுவது தேசிய சேவையாகும்அதேபோல தமிழ் ஒலிபரப்பில்தேசிய சேவையும் மற்றும் மாலை நேரத்தில் இடம் பெறும்இதர நிகழ்ச்சிகளுமாகும் வானொலியே தஞ்சமென இருக்கும் தமிழ் நேயர்கள் பெரும்பாலும் விரும்பிக் கேட்பது வர்த்தக சேவையையே! கர்நாடக சங்கீத இசையைக்கேட்பவர்கள் மிகவும் குறைவாகவே காரணமாக இருப்பது, தென்னிந்திய திரைப்பட இசையே சிங்களமக்களிலும் அனேகம் பேரை இவ்விசை கவர்கின்றதென்பதை ஒருவராலும் மறுக்கமுடியாது.

### அதிகமானோரைக் கவர்கிறது

வானொலியில்இடம் பெறும் விளம்பரச்சேவை நேயர்கள் மத்தியில் அக்கறையையும் ஆவலையும் உண்டு பண்ணி உள்ளது. 82 வீதமானோர் வானொலி விளம்பரத்தை அக்கறையாகக் கேட்கிறார்கள். பத்திரிகைகளிலும் பார்க்க வானொலி விளம்பரம் அதிகமானவர்களைக் கவர்ந்து உள்ளது. வானொலி விளம்பரங்களைக் கவனித்து கேட்பவர்கள் அதிகம் ஆண்களே! இவர்களில் 18 வயதுக்கும் 25 வயதுக்கும்இடைப்பட்டவர்களே அதிகமாகஇருக்கிறார்கள்.விளம்பரத்திற்காகஒலிபரப்பப்படும் பாடல்கள் பெரும்பாலும் தென்னிந்திய திரை இசைப்பாடல்களே! பாடல்களைக் கேட்கும்பொழுது போக்கில் விளம்பரங்களையும் அக்கறையாகக் கேட்கிறார்கள்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன நிகழ்ச்சிகளில் மாற்றம் உண்டு பண்ணித் தென்னிந்திய திரை இசைப் பாடல்களை முற்றாக நீக்குவதற்கான நடவடிக்கைகளில் தகவல் ஒலிபரப்பு அமைச்சர் அவர்கள் ஈடுபட்டுள்ளார். தென்னிந்திய திரை இசைப் பாடல்களை முற்றாக நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகக் கர்நாடக இசைக்கு முக்கிய ...

டும் விரும்பிக் கேட்கமாட்டார்கள். இது மனித சுபாவம். விவாகமாகாதவர்களில் முக்கியமாகக் குறிப்பிடப்படுபவர்கள் பெண்கள்தான். படித்துவிட்டு வேலையற்றிருக்கும் பெண்களுக்கு வீடுகளில் ஆறுதல் கூறும் ஒரு அரிய நண்பனாக இருப்பது வானொலியே! துன்பத்தில் முக்கிய பங்கெடுத்து ஆறுதல் அளித்து மன நிறைவை ஏற்படுத்துவது வானொலியைத் தவிர வேறொன்றுமில்லை.

எனவே இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் ஒலிபரப்பில் தென்னிந்தியதிரை இசைப்பாடல்களை ஒழிக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஆசய்ந்து ஓய்ந்து கருமமாற்றவேண்டியதவசியம். வானொலியின் உபயோகம் பற்றிய ஆராய்ச்சி அறிக்கைகளை மந்திரி அவர்கள் அவதானிக்கவேண்டும். அல்லது திரை இசைப் பாடல்களை ஒழிப்பது சம்பந்தமாக பொதுமக்களிடம் இருந்து அபிப்பிராயம் கோரப்படவேண்டும் அல்லது ஒரு விசாரணைச் சபை நிறுவி அதன் ஆலோசனையின் பேரில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

**மு. வாமதேவன்**

## புள்ளி விபரம் கூறும் சுவையான தகவல்கள்

இருக்கிறார்கள். சமயவிவகாரங்கள் சொற்பொழிவுகள் இவற்றைவிட மெல்லிசையை அதிகம் விரும்பிக் கேட்கிறார்கள்.

### திருமணம் ஆகாதவர்களின் நண்பர்கள்

திருமணம் ஆகாமல் வீட்...

இடம் அளிக்கப்பட இருக்கிறது. இது உள்ளூர் சங்கீத வித்துவான்களுக்கு அவர்களை முன்னணியில் ... செய்வதற்கோர் தூண்டுகோலாக அமையும் அதே நேரத்தில் வானொலியின் ... குறைந்துவிடுமோ ... அஞ்சுவதற்கும் இடம் உண்டு. மார்க்கற் றிசேச் கம்பனி ...

## பஸ்சீர்கேடு அதிகாரி தரும் விளக்கம்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் - கொடிகாமம் சேவையில் ஈடுபட்ட பஸ்கள் அடிக்கடி பழுதடைந்தமையினால் இப்பகுதி சேவையைத் திறம்படச் செய்யமுடியாதிருந்ததாகவும், நேரசூசிகையின்படி பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் பயனளிக்கவில்லையென்றும் இ. போ. ச. பிராந்திய கோண்டாவில் டிப்போ மனேஜர், தென்யாழ்ப்பாணப் பிரயாணிகள் சங்கக்காரியதரிசிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

769-ம் இலக்க பஸ்சேவை அடிக்கடி தடைப்படுவதாகவும், இதனால் பிரயாணிகள் நாளாந்தம் கஷ்டமுறுவதாகவும் தென்யாழ்ப்பாண பிரயாணிகள் சங்கம் இ. போ. ச.முகாமையாளருக்கு புகார்செய்திருந்தது. இதற்குப்பதிலளிக்குமுகமாகமேற்படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கென இம்மாதம் 27-ம் திகதி சாவகச்சேரி எம். பி. திரு வி என். நவரத்தினம் ஆலோசனைக்கூட்டம் ஒன்றை ...

## சுருட்டுத் தொழிலாளர் போராட்டம் வெற்றி

யாழ்ப்பாணம். புதன்

கொக்குவில் கிழக்கில் உள்ள சுருட்டுத் தொழிற்சாலையில் கடந்த 8 தினங்களாக நடைபெற்றுவந்த தொழிலாளர் போராட்டம் நேற்று வெற்றியில் முடிந்தது 1000 சுருட்டுக்கு 15 ரூபா கூலி தரவேண்டும் என இவர்கள் கோரிவந்தனர். இதை முதலாளிநேற்று வழங்கினார்

சுருட்டுத் தொழிற்சாலையின் உரிமையாளரான திரு செல்லத்துரையை அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்க இணைச் செயலாளர்களான திரு. ஏ விசுவநாதனும், திரு. ஏ என் ராசாவும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து1000சுருட்டுக்கு 15 ரூபாகூலிவீதம்இவர்கள் முன்னிலையில் சம்பளம் ...

## 'கூட்டுறவு சங்கங்கள் எல்லாம் தவறுவிடவில்லை'

யாழ்ப்பாணம், செவ்

'கூட்டுறவுச் சங்கங்கள் மூலமே வேலையில்லாப் பிரச்னையை நாம் ஓரளவு தீர்க்க முன்வர வேண்டும். பல சங்கங்கள் விடுகின்ற பாரதூரமான தவறுகளால் நாம் எல்லாச் சங்கங்களையும் சந்தேகக்கண்கொண்டு பார்க்க வேண்டியுள்ளது. கூட்டுறவு அமைப்புக்கு தலைவர்களின் இத்தகைய வழிநடத்தல் மாபெரும் துரோகமாகும். இதனைத் தவிர்க்க வேண்டும். இன்றேல் கூட்டுறவின் மகிமையே கெட்டுவிடும்.'

இவ்வாறு யாழ் மக்கள் துறைமுகத் தொழிலாளர் சங்கக் கூட்டத்தில் பேசிய யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சங்கக் காரியாலய பரிசோதகர் திரு வி. இராமநாதன் கூறினார்,

திரு எம், ஜேக்கப் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் ஸ்ரீல சு. கட்சிப் பிரமுகர் திரு ஸி. நடராசா பேசுகையில் கூட்டுறவுச் சங்கங்களை அபிவிருத்தியடையச்செய்யும் நோக்கத்துடன் அரசாங்க இலாகாக்களிடமிருந்து பல கருமங்களை கூட்டுறவுச் சங்கங்களிடம் கையளிக்க அரசாங்கம் ஆலோசித்துள்ளது. இதன் மூலம் மக்கள் பயனடைய வேண்டும் என்றார்.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு எம். ஜேக்கப், செயலாளர் ஜே. அன்ரனி, பொருளாளர்: ஜே எம். இராசு.

ஆறுபேர்கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## சு.கட்சியின் 34வது கிளை

யாழ்ப்பாணம், புதன்

'சுதந்திரக் கட்சியின் கீழ்தான் தமிழ் மக்கள் விமோசனம் அடையமுடியுமென்பதை எமது மக்கள் இப்போது உணர்ந்து கொண்டுள்ளனர்' என சுதந்திரக் கட்சியின் 34வது கிளை மானிப்பாயில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டபோது, வைபவத்திற்குத் தலைமை வகித்துப்பேசிய சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்டத் தலைவர் திரு ம. நடராஜா கூறினார். இடதுசாரி இயக்கத்தில் பயிற்றப்பட்ட அநேகர் இக் கிளையில் சேர்ந்திருப்பதாக அவர் சொன்னார்

இக் கிளைக்குத் தலைவர் ...

## வட்டார எல்லைப் பிரச்னை இன்று விசாரணை

அம்பன், செவ்வாய்

குடத்தனைக் கிராம சபையின் 7-ம், 8-ம் வட்டார எல்லைகள் பிரிக்கப்பட்ட சமயத்தில் ஏற்பட்ட மாற்றம் சம்பந்தமாக அம்பன் கொட்டோடை றேட்டுக்குக் கிழக்கிலுள்ள வாக்காளர்கள் உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் ஆட்சேபம் தெரிவித்ததைத் தொடர்ந்து உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் ஆய்வு உத்தியோகத்தர் இம்மாதம் 26-ம் திகதி குடத்தனைக் கிராம சபை மண்டபத்தில் வைத்து விசாரணை நடத்தவிருக்கிறார் மேற்படி விசாரணை சம்பந்தமாக நாகர்கோவில் கிராம சேவையாளர், அம்பன் கிராம சேவையாளர், குடத்தனைக் கிராம சபைத் தலைவர், 7-ம், 8-ம் வட்டார கிராம சபை உறுப்பினர்கள் ஆட்சேபனை மனுத்தாக்கல் செய்தவர்கள் ஆகியோர் சமூகமளிப்பர்.

## அரிசி பற்றுக்குறை ஏற்படாது

கோட்டை, செவ்

தெற்களஞ்சியங்கள் யாவற்றிலும் போதியளவு நெல் இருக்கிறது இனிமேல் பற்றுக்குறை யென்பதேயிருக்காது

கொழும்பிலுள்ள மக்களிற்பலர் அரிசிபற்றுக்குறை யேற்படுமென அச்சம் தெரிவித்ததைத் தொடர்ந்தே உணவு ஆணையாளர் திரு. பி பி வி' ஜே செனரத்தின மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். கொழும்பில் இரு கிழமைகளுக்கொரு தடவை சில கூட்டுறவுக் கடைகள் இலவசமாகக் கொடுக்கும் பங்கீட்டரிசியை வழங்கிதாலேயே மக்களிடையே அரிசி பற்றுக்குறை யேற்படுமா என்ற ஒரு ஐயப்பாடு தோன்றியதாகத் தெரிய வருகிறது.

## தீ வைத்தனராம்

தாவடி, செவ்

தாவடிப்பகுதியில் உள்ள முருகமூர்த்தி ஆலயத்திற்கு அண்மையில், வீடு அமைத்து வாழ்ந்து வரும் அடியார் ஒருவருடைய பலதளபாடங்கள் துணிவகை மற்றும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவேண்டும்.

தமது கட்சி உறுப்பினருக்கு 'பேசுவதை அளந்து' பேசுங்கள் என்று எச்சரிக்கை விடுத்ததுமல்லாமல் மேடைப்பேச்சில் தமக்கு நம்பிக்கையில்லையென்றும் செயலில்தான் தமக்கு நம்பிக்கை இருக்கிறதென்றும் பிரதமர் கூறியிருப்பது ஆட்சியன்ற பிரதிநிதிகளுக்கு மட்டுமல்ல ''எங்களவர்கள் ஆட்சிக்கு வந்துவிட்டார்கள் இனி ஒருகை பார்ப்போம்'' என்ற மனப்பான்மையுடன் நடந்துகொள்ள எத்தனிக்கும் மற்றையவர்களுக்கும் அறிவுரை புகட்டும் வாக்கியமாகவே இது தென்படுகின்றது.

பிரதமர் இப்படிக் கருத்து வெளியிட்டிருக்கும் அதேயுள்ளவர்களும் அவர்களை ஆட்சிபீடத்திலமர்த்துவதற்குத் தாங்கள் தான் காரணமென்றும் சொல்லிக்கொள்பவர்களும் செயலில் அதாவது யாரையும் பழிவாங்குவதுதான் சோஷலிஸம் என்று எண்ணாமல் செயலிலீடுபட்டால், உண்மையான சோஷலிஸம் இங்கு ஏற்படுவது கடினமல்ல.

ஆனால் சோஷலிஸம் அரசியல் மற்றும் துறைகளில் பழிவாங்குவதிலும்வன்முறையைத்தூண்டிவிடுவதிலும் தான் தங்கியிருக்கிறதென்று நினைத்தால் அது சோஷலிஸத்துக்குக் கெடுதிசெய்வதாகவே முடியும்.

பிரதமரின் பேச்சும், எச்சரிக்கையும் இதற்கு இங்கு இடமளிக்க மாட்டாதென்றே நம்பலாம்.

# அல்லைப்பிட்டிச் செய்திகள்

## நிர்வாகிகள்

அல்லைப்பிட்டி, செவ்வாய்

அல்லைப்பிட்டி சனசமூக நிலையத்தின் மாதாந்தக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோதுபின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: பி.ஏ. அலோசியஸ் உபதலைவர்: என். சவரிமுத்து, செயலாளர்: த. அருணகிரி, உப செயலாளர் வி. அருளானந்தம், பொருளாளர்: எஸ். செல்லத்துரை கலாச்சார செயலாளர்: இ. சிவபாதம், விளையாட்டுச் செயலாளர்: சே. ஆலாலசுந்தரம் பொருளாதார ஆலோசகர் எஸ், சச்சிதானந்தம்.

## சு. கட்சிகிளை

இம்மாத இறுதிக்குள் அல்லைப்பிட்டியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கிளையொன்றை நிறுவுவதற்கு அல்லைப்பிட்டிப்பகுதி மக்களும், தீவுப்பகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கிளையினரும் முயற்சி செய்து வருகின்றனர். திறப்புவிழாவில் கலந்துகொள்வதற்கு தபால் அமைச்சரை அழைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## பிரயாணக்கஷ்டம்

அல்லைப்பிட்டிக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே சேவையிலீடுபடும் இ. போ. ச. பஸ் தினமும் இரண்டு வேளை மட்டும் சேவையில் ஈடுபடுவதனால் மற்றும் நேரத்தில் இப்பகுதிமக்கள் பிரயாணம் செய்வதற்ள் மிகுந்த கஷ்டமடைகின்றனர். அல்லைப்பிட்டிமக்களின் பிரயாணக் கஷ்டம் நீங்குவதற்கு தினமும் பஸ்சேவை அதிகரிக்கப்பட வேண்டுமெனப் பிரயாணிகள் சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

## தொலைபேசி கிடைக்கும்?

பல வருடகாலமாக தொலைபேசிவசதியற்றிருந்த அல்லைப்பிட்டி உபதபால் நிலையத்திற்கு இவ்வருட இறுதிக்குள் தொலைபேசிவசதிகிடைக்கவிருக்கின்றது? இத்தபால் நிலையத்திற்கு தொலைபேசிவசதி செய்து தரும்படி பலவருடகாலமாக இப்பகுதி மக்கள் அரசினரைக் கேட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

## 'பொலிஸ் நிலையம் அமைக்கவும்'

ஊர்காவற்றுறை, செவ்.

'சரவணை - புளியங்கூடல் சந்தியில் பொலிஸ் உபநிலையம் ஒன்றை அமைத்துத்தர வேண்டும்' என கோரும் தீர்மானம் ஒன்றை சரவணை தமிழரசு வாலிப முன்னணி தீவுப்பகுதி எம். பி.க்கு அனுப்பிவைத்துள்ளது.

போக்கு வரத்துக்குப் பிரதானவீதியாக அமைந்துள்ள சரவணை, புளியங்கூடல், சுருவில் வீதி அகலித்துச் செப்பனிடப்படவேண்டும் எனவும் முன்னணி கேட்டுள்ளது.

கிராமத்தின் தேவைகள் குறித்து மகஜர் சமர்ப்பிக்குமாறு தீவுப்பகுதி எம். பி. வாலிப முன்னணியைக் கேட்டிருந்தார்.

இதுசம்பந்தமாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கென இம்மாதம் 27-ம் திகதி சாவகச்சேரி எம். பி. திரு. வி என். நவரத்தினம் ஆலோசனைக்கூட்டம் ஒன்றை டிறிபேக்கல்லூரியில் கூட்டுகிறார். (கு வி ம)

# இன்றைய பலன்

(ஆவணி மாதம்10-ம் திகதி)

(26-8-70)

மேஷம்- பணநிலைமை ஸ்திரமாக இருக்கும். சினிமாத்தொழிலில் ஈடுபடுவோர்கள் சிறப்படைவர்.

ரிஷபம்- ஆடம்பரமான செலவுகளை இன்று தவிர்த்துக்கொள்க. உணவுவிடயத்தில் அதிக கவனம் செலுத்தவும்.

மிதுனம்- பண விவகாரத்தில் அதிக கவனம் செலுத்தவும். நாவடக்கம் விரும்பத்தக்கது,

கடகம்- எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றக்கூடும், மௌனம் நன்று.

சிம்மம்- ஆக்கப்பணியில் ஈடுபடுவீர்கள். எதிர்பாராத விருந்து பசாரத்திற்கும் இடமேற்படும்.

கன்னி- பொதுவாக வாழ்க்கையில் அபிவிருத்தி காணப்படுகின்றது. வீட்டிலும் மதிப்பு உயருவதற்கு இடம்உண்டு.

துலாம்- அன்னியவாசம் அமைதிக்கு உலைவைக்கும் தெய்வநம்பிக்கை சிறந்த பயன்தரும்.

விருட்சிகப்- ஒளிமயமான சூழ்நிலை இன்று உருவாகும். இருமனம் கலந்தவர்கள் மத்தியில் இனிமையான சம்பவங்கள் இடம்பெறும்.

தனு- செலவினங்கள் அளவுக்குமிஞ்சியதாக இருக்கும். நண்பர்களின் தொல்லைகளால் நஷ்டமடைவீர்கள்.

மகரம்- இரக்கசிந்தை மேலோங்கும். பிறர்க்கு உதவுவதில் பெரும் மகிழ்ச்சியடைவீர்கள்.

கும்பம்- பதவியில் இருப்போர்க்கு உயர்வு கிடைக்கலாம். வெளியிடத் தொடர்புகள் வளர்வதற்கு இடம் உண்டு.

மீனம்- வணிகத்துறையில் முன்னேற்றம் காணப்படும். நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும்.

சோதிடக்கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

...யை அதிகம் விரும்பிக் கேட்கிறார்கள்.

## திருமணம் ஆகாதவர்களின் நண்பர்கள்

திருமணம் ஆகாமல் வீட்டில் இருந்து பொழுது போக்கும் மங்கையர்களும் இளைஞர்களுக்கும் காதலியை விட மிகப் பிரயோசனமானதும் அதி உன்னத நண்பனுமாக இருப்பது வானொலியின் தமிழ் சிங்கள வர்த்தகசேவைகளே. தமிழ் வர்த்தக சேவையில் பெரும்பாலும்தென்னிந்திய திரைப்பட இசையே முக்கிய இடம் பெற்றுள்ளது. இந்தத்திரையிசையை அவர்கள் எத்தனை தரம் கேட்டாலும் அலுப்புத் தோன்றாத அளவு அவ்விசையுடன் இரண்டறக்கலந்து விட்டார்கள். விவாகமாகாதோர் 53 வீதத்தினர் தினமும் வானொலி கேட்கிறார்கள். இவர்களுடன் விவாகமானோரை ஒப்பிடும் போது விவாகமானோர் 35 வீதத்தினர் மட்டுமே!

வீட்டுப் பாவாளையாளர்களைத் தவிர சிற்றுண்டிச் சாலைகளில் தினமும் முழு நேரமும் வானொலியைக் கேட்கிறார்கள். சிற்றுண்டிச் சாலைகளில் மட்டுமின்றி சனசமூக நிலையங்களிலும் மற்றும் பொது இடங்களிலும் வானொலி முக்கிய இடம் பெறுகின்றது. தமிழ் நேயர்களைப் பொறுத்தளவில் இம் முக்கியத்துவத்துக்கு முக்கியகளை முன்னணியில் முச் செய்வதற்கோர் தூண்டுகோளாக அமையும் அதே நேரத்தில் வானொலியின் தரம் குறைந்துவிடுமோ என்று அஞ்சுவதற்கும் இடம் உண்டு. மார்க்கற்றிசேச் கம்பனிப் படி... தோர் தொகையில் 52 வீதமானோரே வானொலியைக் கேட்கிறார்கள். பொதுவாக எல்லாப் பிரிவினரும் 3 தடவை கேட்கிறார்கள் இந்த ரீதியில் 39 வீதத்தினர் மட்டுமே தினமும் வானொலியை விரும்பிக் கேட்கிறார்கள்.

## பலவந்தமாக திணிக்க முடியாது

பொதுவாக நேயர்கள் விரும்பிக் கேட்பது மெல்லிசையையே இது பரிசீலனைகளில் இருந்து புலனாகிறது. இம்மெல்லிசையில் இடம் பெறும் பாடல்கள் பெரும்பாலும் தென்னிந்திய திரைப்பட இசைகளே! எனவே தென்னிந்தியதிரைப்பட இசையை முற்றாக ஒழித்துக் கட்டிவிட்டால் வானொலியின் உபயோகம் பயனற்றதொன்றாகிவிடும். மக்கள் எப்பொழுதும் அவர்கள் விரும்பும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளையே விரும்பிக் கேட்பார்கள். ஆனால் பலவந்தமாக இது தான் பொழுதுபோக்கு நிகழ்ச்சி என்று அவர்களுக்கு விரும்பாத பிடிக்காத நிகழ்ச்சிகளை கடைசி மட்...

# அண்டினவர்க்கு அருள்புரியும் ஆலடிப் பிள்ளையார்

இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்குமுன் அல்வாய் தெற்கில் உள்ள சிறுபான்மைத் தமிழ் மக்கள் தங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் துன்பங்கள் யாவற்றையும் உணர்ந்து அல்வாய் சாமணந்தறை என்னும் இடத்தில் உள்ள ஆலின் கீழ் பிள்ளையாரைப் பிரதிஷ்டை செய்தனர். அன்று தொடக்கம் அல்வாய் சாமணந்தறை ஆலடி பிள்ளையார் அருள் புரிந்து வருகின்றார்.

சிறிது காலத்தின் பின் சிறு கட்டிடம் ஒன்றை

(சி. ப. சசிதரன்)

அமைத்து பிள்ளையாரை அதனுள் பிரதிஷ்டை செய்தனர். தினசரி பூசை நடைபெற்று வந்தது. ஆரம்ப காலத்தில் இக் கோவிலைச் சேர்ந்த ஒருவரே தினசரிப் பூசையைச் செய்து வந்தார். 1931ம் ஆண்டு தொடக்கம் திரு செல்லையா குருக்களும் அவரின் சந்ததியினரும் தினசரிப் பூசையை முறைப்படி செய்து வருகின்றனர்.

1942ம் ஆண்டு தொடக்கம் மேற்படி ஆலயத்தைப் பரிபாலிப்பதற்கு அவ்வூர் மக்கள் ஒரு சபையை நியமித்தனர். இச்சபை கோவில் அபிவிருத்திகளைக் கவனிக்கத் தொடங்கியது. அதன் பிரகாரம் கிணறு, வீதி, கட்டிடங்கள் தோன்றின. 1968ம் ஆண்டு ஆவணி மாதம் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதைத்தொடர்ந்து ஒவ்வொருவருடமும் ஆவணி மாதம் மிருகசிரிட நட்சேத்திரத்தன்றுதொடங்கி பத்து நாட்களுக்கு உற்சவம் நடைபெற்றுகடைசிநாளில்தீர்த்தமாடுவதோடு விழா முற்றுப் பெறும்.

ஆவணிச் சதுர்த்தி, கந்த சஷ்டி, திருவாதிரை, மகா சிவராத்திரி ஆகிய காலங்களில் விசேஷ உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன.

இன்று (26-8 70) உற்சவம் ஆரம்பமாகின்றது.

## கடவுளின் படைப்பு''

முசலி, செவ்

'நாடகக்கலைஒரு பொழுது போக்குகலையல்லை, நாடகக் கலையானது கடவுளினால் படைக்கப்பட்டதென்று புராணங்களின் வாயிலாக நாம் அறிகின்றோம். கலையினுடைய தெய்வீகத் தன்மையை நாம் உணர வேண்டும். நாடகத்தில் வரும்கதாபாத்திரஅமைப்பு, அவை போதிக்கும்படிப்பினை பண்பு என்பனபற்றிய நல்லொழுக்கங்களை நாம் மனதில்நன்றாக பதியவைக்கவேண்டும்'

இவ்வாறு மன்னார் மாவட்டத்தில் இசமலைத்தாழ்வு என்னுமிடத்தில் அரங்கேற்றப்பட்ட ''எம்பரதோர்' என்னும் வடமோடி நாட்டுக்கூத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் முசலிப் பிரிவு காரியாதிகாரி திரு. வை. சொக்கலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

...செயலாளர்களான திரு. ஏ விசுவநாதனும், திரு. ஏ. என் ராசாவும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து1000சுருட்டுக்கு 15 ரூபாகூலிவீதம்இவர்கள் முன்னிலையில் சம்பளம் வழங்கப்பட்டது.

## ப.நோ.கூ.சமூலம் உணவுப் பொருள் விநியோக

கோட்டை. செவ்

கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தின்மூலம் இறக்குமதி செய்யப்படும் எல்லா உப உணவுப் பொருட்களையும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவிற்பனைசெய்யஅரசாங்கம்முடிவுசெய்துள்ளது. இவ்வளவு காலமும்உப உணவுப் பொருட்களை கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் இறக்குமதி செய்து 'பெர்மிட்' முறைமூலம் தனிப்பட்ட வர்த்தகர்களுக்கு வழங்கி வந்தது

நாடுபூராவும் 22 கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனக் களஞ்சியங்கள் நிறுவப் படவுள்ளன இந்தக் களஞ்சியங்களிலிருந்து ஒவ்வொரு காரியாதிகாரிப் பிரிவிலும் உள்ள பலநோக்குக் கூட்டுறவு சமாஜங்கள் உப உணவுப் பொருட்களை மொத்தமாக வாங்கி, அந்தந்தக் காரியாதிபிரிவுகளிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கும்.

...வைத்துப்பேசிய சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்டத் தலைவர் திரு ம. நடராஜா கூறினார். இடதுசாரி இயக்கத்தில் பயிற்றப்பட்ட அநேகர் இக் கிளையில் சேர்ந்திருப்பதாக அவர் சொன்னார்

இக் கிளைத்தலைவர் திரு. ம சிவபாலராஜா பேசுகையில், கூட்டு முன்னணி தேர்தல் காலத்தில் அளித்த எல்லா வாக்குறுதிகளையும் நிறைவேற்றுமென்றும், கட்சி பேதமின்றிக் கூட்டு முன்னணி அரசாங்கம் நீதி வழங்குமென்றும் கூறினார். கிளைச் செயலாளர் திரு த. இரத்தினசபாபதியும் பேசினார். இக் கிளையின் மற்றும் உத்தியோகஸ்தர் விபரம் வருமாறு:

உப தலைவர்கள்: அ பூபாலசிங்கம், வி சுந்தரலிங்கம், சி கேசவராஜா உப காரியதரிசிகள்: ரா சேனாதிராஜா, அ சிவானந்தா, பா யோகரத்தினம், தனாதிகாரி: இ. சாதுசிகாமணி. ஆறு நிர்வாகசபை அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## இன்று மீசாலையில் இசை விழா

யாழ்ப்பாணம் புதன்

மீசாலை தமிழிசைச் சங்கத்தாரால் மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில் முன்றலில் 'இசை விழா' இன்று தொடக்கம் நான்கு நாட்கள் வரை பெறும்.

முதலாவது நாளாகிய இன்று திரு.வி என் நவரத்தினம் ஆ. உ, தலைமை வகிப்பார். சங்கீதபூஷணம் திரு சி. விஞசித்தம்பிக்கு பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படும். பின்னர் திருவாளர்கள் கு வேலயுதபிள்ளை, இ த சுப்பிரமணியம், வி நடேசன், க சங்கரப்பிள்ளை ஆகியோர் பாராட்டுரை வழங்குவர். இறுதியில் தமிழிசைமணி திரு பி ஏ எஸ் இராஜசேகரனின் பண்ணிசை இடம்பெறும்.

... ...

## ரூ.1000 பிணையில் செல்ல அனுமதி

அனுராதபுரம், செவ்,

அனுராதபுரம்- கெரவப்பொத்தானை எம் பி திரு, ரி. பி, ஹேரத்தைக் கொலை செய்யச் சதிசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட கே. கிரலா என்பவர் 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார் மீண்டும் செப், 2-ந் திகதிகோர்ட்டில்ஆஜராகுமாறு நீதிபதி அவருக்கு உத்தரவிட்டார்

தாவடி, செவ்

தாவடிப்பகுதியில் உள்ள முருகமூர்த்தி ஆலயத்திற்கு அண்மையில், வீடு அமைத்து வாழ்ந்து வரும் அடியார் ஒருவருடைய பலதளபாடங்கள்துணிவகை மற்றும்சமையல் செய்வதற்கான பொருட்கள் முதலியனவற்றைத் திருட முயன்றார்களாம் ஒரு கோஷ்டியினர். முயற்சி பயனளிக்காமல் போகாமல் போகவே அவர்கள் வீட்டிற்குத்தீமூட்டிவிட்டுச்சென்றார்களாம். இது பற்றிசம்பந்தப்பட்ட அடியார் கிராமசேவகரிடம் புகார் செய்துள்ளார்.

அரிசிப்பையை எடுத்துச் சென்றபோது அரைவாசி கோவில்முன்வீதியில் சிந்தியிருந்ததாகவும் தெரிய வருகிறது.

வேட்டைக்குச் சென்றவர்

## பாம்பு தீண்டி மரணம்

பூநகரி, செவ்வாய்

காட்டிற்கு வேட்டையாடச் சென்ற இளைஞர் ஒருவர் இரத்தப் புடையன் பாம்பு கடித்ததினால் மரணமானார்,

பூநகரி பல்லவராயன்கட்டைச் சேர்ந்த செல்லையா இராசமணி என்ற 24வயது இளைஞரே இப் பரிதாபமுடிவுக்கு இலக்கானார். அவரை காப்பாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை. இறந்தவருடைய உடம்பு, முழுவதும் சிவப்பு நிறமாக மாறியிருந்தது.

## சம்பத பரிசுகளாக நைலோன் சேலைகள்

பாணந்துறை, செவ்.

சம்பத சுவீப் டிக்கட்டுகள் வாங்குபவர்களுக்கு வழங்கப்படும் 200 ஆறுதல் பரிசுகளோடு 'பட்டர் நைலோன்' சேலைகளும் வழங்க தேசிய லொத்தர்சபை தீர்மானித்துள்ளது. செப்டம்பர்முதலாம் திகதி மாத்தளையில் 'இழுக்கப்படவிருக்கும் இரண்டாவது மகாஜன சம்பத சீட்டிழுப்பில் இது வழங்கப்படும்.

இந்த பட்டர் நைலோன் சேலைகள் ஒருஎண் தவறிய டிக்சட்டுகள் வைத்திருக்கும் 400 பேருக்கும் மேற்பட்டவர்களுக்கு குறைந்த விலைக்கு வழங்கப்படவிருக்கிறது.

வேலணை, செவ்வாய்

நெடுந்தீவில் நல்லிணக்க சபை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்குத் தகுதியானவர்களின் பெயர் பட்டியலை அனுப்பும்படி கசெட் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26-ம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org